Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு 5 தொகுதி 3 ஜுலை - செப்டம்பர் - 2015



R 5951

## மிகுதியான உபத்திரவங்கள் - மேலான வெகுமதி
## GREATER SUFFERINGS - GREATER REWARD

ஆதார வசனங்கள் : 2கொரிந்தியர்4:16–18

உபத்திரவத்தில் துவண்டுபோகாதிருத்தல் – சுபாவ மனுஷன் அழிந்துபோதல் – புதிய சிருஷ்டி வளர்ச்சியடைதல் – எவை இலேசான உபத்திரவங்கள் ? – அவைகள் எவ்வளவுகாலம் நீடிக்கும் ? – அவைகளது நோக்கம் என்ன ? இந்த நோக்கத்தை எப்படி நாம் அடைவது ?

"காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" – 2கொரிந்தியர் 4:18

பரிசுத்த பவுலின் வார்த்தைகளும் செயல்களும் கிறிஸ்தவனுக்கு எப்பேர்ப்பட்ட தைரியத்தை வெளிப்படுத்துகின்றன! அவர் பல்வேறு கடினங்களை சகித்திருக்கிறார். ஒரு தானியம் புடைக்கும் இயந்திரத்தின் அனுபவத்தை அவர் அடைந்ததாலேயே எழுதுகிறார்; "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது"– 2கொரிந் 4:16. ஆ! இது உள்ளான மனுஷனாகிய புதுசிருஷ்டி புதிதாக்கப்படுதலே இரகசியமான காரியம். புறம்பான மனிதனின் உபத்திரவங்களிலிருந்து அனுபவங்களை அடைந்து, அவைகளை வேறுபட்ட கண்ணோக்கில் பார்க்கும்படிக்கும் அதிலிருந்து விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்கும்படிக்கும் உள்ளான மனிதன் இல்லாதிருந்திருந்தால், புறம்பான மனிதனுக்கு நேரிடுகின்ற உபத்திரவங்கள் மெய்யாகவே, கொடிதான அனுபவங்களாக இருந்திருக்கும். தேவன் தன் பட்சத்தில் இருப்பாராகில், மற்ற எதிர்ப்புக்கள் அனைத்தும் ஒன்றுமில்லாததாகிவிடும் என்ற தேவனுடைய வாக்குறுதியை உள்ளான மனுஷன் அடைந்திருக்கிறான். தன் அனுபவங்கள் அனைத்தையும் தன் மேலான நலன்களுக்கேதுவாக மேற்பார்வையிட்டு, தேவன் பராமரிப்பார் என்ற நிச்சயத்தை அவன் பெற்றிருக்கிறான். எந்தஅளவுக்கு சோதனைகளை விசுவாசத்தோடு சகிக்கிறானோ, அதே அளவுக்கு ஒப்பாக, வருங்காலத்தின் மகிமைகளை அடைவோம் என்ற நிச்சயத்தையும் அவன் அடையப்பெற்றிருக்கிறான்.

**கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம்**

தேவனிடத்திலும் சபையினிடத்திலும், சத்தியத்திலும் அப்போஸ்தலர் கொண்டிருந்த பெரிதான வைராக்கியத்தின் இரகசியத்தை நாம் அடையப் பெறுகிறோம். அவர் அதரிசனமானவரை தரிசிக்கிறதுபோல உறுதியாய் இருந்தார்(எபி11:27). பரிசுத்தபவுல் இருவித வாழ்க்கை வாழ்ந்தார், அதாவது – ஒரு மனிதனாக, தர்சூசைச் சேர்ந்த சவுலாகவும் ஆனால் நிஜத்தில் அவர் தேவஊழியனாகிய பவுலாக, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுசிருஷ்டியாக காணப்பட்டார். உலகம் அவரை அறியவில்லை, ஆயினும் அவர் தம்மைத்தாமே அறிந்திருந்தார், தன் தேவனையும் அறிந்திருந்தார். மேலும் தெய்வீக வல்லமையாலும், தேவவார்த்தையின் செய்தியாலும் ஆற்றலூட்டப்பட்டிருந்தார். அது கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் உறவுகொள்ளும்படியும் சமாதானத்தை அடையவும்




### இம்மாத வெளியீட்டில்

.. மிகுதியான உபத்திரவங்கள்.............................. 1
.. நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள்...................... 3
.. தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம்.................... 4
.. ஆவிக்குரிய பெருமையினால் வரும் ஆபத்து.. 7
.. விநோதமான ஜனங்கள். ............................ 16

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அவரிடத்தில் பேசினது. அதோடுகூட, ஓட்டத்தின்முடிவில் ஆவலோடு காத்திருக்கின்ற உண்மையுள்ள அனைவருக்கும் கனம் மகிமை சாவாமை ஆகியவற்றைக் குறித்தும் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இயேசுவின் அடிச்சுவடுகளில் உண்மையாய் நடந்துகொண்டிருக்கின்ற, தேவவசனத்தின்மூலம் போதிக்கப்பட்டுவருகிற, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய குடும்பத்தின் பிள்ளைகள் அனைவருக்கும் அப்போஸ்தலரது சொந்த அனுபவங்களின் இரகசியம் திறந்த புஸ்தகமாக உள்ளது. சபையின் தலையாகிய இயேசுவுக்கும், அதன்பின் அப்போஸ்தலர்களுக்கும், ஆதிகால சபையின் அங்கத்தினர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்ட பெரிதான தெய்வீக தயவைப்போல் நாம் பெறவில்லை. ஆயினும் பொதுவான வழிமுறைப்படி, தேவனுடைய அதே தயவுகளை தேவனுடைய அதே வாக்குத்தத்தங்களை, அவர்கள் பெற்றிருந்த அதே எழுச்சியூட்டும் நம்பிக்கையை நாம் இப்போதும் பெற்றிருக்கிறோம். "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" – 2கொரிந்4:17. அவர் வார்த்தைகளில் அவர் காண்பித்த சகிப்புத்தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

உயிர்த்தெழுதலைக் குறித்து எழுதும்போது, அப்போஸ்தலர் ஒத்த கருத்தையே தருகிறார், உயிர்த்தெழுதலில் சபை எப்படி இருக்கப்போகிறது என்று அவர் பிரகடனப்படுத்துகிறார். உண்மையுள்ளோர்




அனைவரும் மகிமைப்படுத்தப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படுவார்கள். ஆயினும் எல்லோரும் ஒரே விகிதத்தில் ஆசீர் பெறமாட்டார்கள்.

"மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" –1கொரிந்15:41,42.

தானியேல் தீர்க்கதரிசனத்திலும் இதே பாடம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கும் உயிர்த்தெழுதலையும், உயிர்த்தெழுவோரையும் நட்சத்திரத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அவைகளின் அழகிலும் பிரகாசிக்கும் தன்மையில் உள்ள வித்தியாசத்திற்கு ஒப்பாக உயிர்த்தெழுதல் காண்பிக்கிறது– தானி12:1–3.

தெய்வீக ஏற்பாட்டின்படி, கிறிஸ்து பட்ட துன்பங்களின் அளவுக்கேற்ப அவர் அடையவிருக்கும் மகிமையும் இருக்கும் என்பது அப்போஸ்தலரின் வாதம். எனவே வரவிருக்கின்ற மகிமையில் கர்த்தரோடுகூட பங்கேற்கும் பொருட்டு, தற்கால துன்பங்களில் அவரோடுகூட பங்கேற்க அப்போஸ்தலர் விரும்பினார். அதற்கு பதிலாக, "சுவிசேஷஊழியத்தில் என்னுடைய பங்குக்கு அதிகமாகவே நான் செய்கிறேன்" என்று மற்றவர்களிடத்தில் கூறுவதும், "உங்களில் சிலர் என்னிடத்தில் வந்து எனக்கு உதவவேண்டும், எனக்கு ஒய்வளிக்கவேண்டும்" என்று தனக்குத்தானோ அல்லது மற்றவர்களிடத்திலோ கூறுகிறார்கள். பரிசுத்தபவுலோ இவ்விஷயத்தை வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்கிறார். கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை, கூடுமானஅளவு நிறைவாக்க தாம் பேராவலோடும், மனப்பூர்வமாகவும் இருப்பதாக அறிவிக்கிறார் (கொலோ1:24). உபத்திரவம் அடைவது அனைத்தையும் மகிழ்ச்சியாக எண்ணுவதாகக் கூறுகிறார். ஏனெனில், உபத்திரவம் தன் குணாதிசயத்தில் பரிசுத்தஆவியின் கனிகளை வெளிக்கொணரும் என்று அறிந்திருந்தார். அதுவே தம்மை ராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்தும் என்று எண்ணினார்(ரோமர்5:3–5).இதற்கிடையே, கிறிஸ்துவோடுகூட பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகை செய்யமுடியும். அவரோடுகூட மரிப்பவர்களே அவரோடுகூட பிழைத்திருக்கவும் முடியும் என்ற வேதாகமத்தின் நிச்சயத்தை நினைவுகூருவோம்.

### அவரது உண்மையின் இரகசியம்

எல்லாவற்றிலும் சாதகமான சூழலில் ஒரு கிறிஸ்தவனாக தன் வழியை துவங்குவதை அநேகர் எளிதாக எண்ணுகின்றனர். சிலர் எழுச்சியோடு தங்கள் ஓட்டத்தை சிலகாலம் ஓடினாலும், அதன்பின் நற்கிரியை செய்வதில் சோர்வு அடைகின்றனர். ஆனால் அப்போஸ்தலர் ஒருபோதும் சோர்ந்துபோகவில்லை எனத் தெரிகிறது. அவருடைய சொந்தசௌகரியத்தைப் பொருத்தவரை, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் எப்போதும் ஜாக்கிரதையாக இருந்தார். கேட்க செவியுடைய அனைவருக்கும் சுவிசேஷத்தை எங்கும் எப்பொழுதும் பிரசங்கிக்க தயாராகவே இருந்தார். அவரது விடாமுயற்சியின் இரகசியம் 18ம் வசனத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

"காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்"– 2கொரிந்4:18.

இவ்வார்த்தைகள் எதை அர்த்தப் படுத்துகின்றன ? பரிசுத்தபவுல் ஆவிக்குரிய கண்களின் பார்வையைப் பெற்றிருந்தார் என்பதையே இவ்வார்த்தைகள் அர்த்தப்படுத்துகின்றன. அவர் உண்மையாகவே பூமிக்குரிய ஈர்ப்புகளை கண்டார்,

இருந்தபோதிலும் காணப்படாதவைகளை புரிந்துகொள்ளும் ஆற்றலால், அவரது ஆவிக்குரிய பார்வையினால், அவைகள் அவரை ஈர்க்க முடியவில்லை. விசுவாசக்கண்களால் அவர் பரலோகப்பிதாவையும், மகிமையடைந்த கர்த்தராகிய இயேசுவையும், பரம சேனைகளையும் வரவிருக்கும் ராஜ்யத்தின் மகிமை கனம் சாவாமையையும் கண்டார். விசுவாசத்தினால் தமக்கு முன்பாக பரந்து விரிகின்ற மாபெரும் ஆயிரமாண்டு ராஜ்யத்தினை கண்டார். மேலும் அந்த ராஜ்யத்தில் தன் எஜமானும் மீட்பருமானவரோடு வாரிசு உரிமையில் இணைவதற்கான தெய்வீக அழைப்பைக்கேட்டார். அந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார். இப்படியாக தன் குருவின் கொடியின்கீழ் தன்னை இணைத்துக்கொண்டார். மேலும் தேவன் வாக்களித்திருந்த நித்தியமானவைகளோடு ஒப்பிடுகையில் இவ்வுலகத்திலுள்ள அனைத்தும் மதிப்பற்றவை என்றும் அவர் உணர்ந்துகொண்டார். தேவ வசனத்தின் பேரிலேயே அவரது நம்பிக்கை இருந்தது.

இன்றைய நாளில் ஜீவிக்கின்ற கர்த்தருடைய பிள்ளைகளிடத்திலும் அவ்வாறே இருக்கவேண்டும். அரசியல், சமுதாய அந்தஸ்து, ஆஸ்தி, வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுவதன்மூலம் அடையும் அனுகூலத்தை நாம் கண்ணோக்கக்கூடும். ஆனால் நாம் பரலோகத்துக்குரியவைகளாகிய புதுசிருஷ்டியின் புதிய பார்வையில் கண்டிருக்கிறபடியால், இந்த பூமிக்குரிய குறிக்கோள்களும் இலட்சியங்களுமாகிய அனைத்தும், ஒப்பிட்டுப்பார்க்கையில், நமக்கு மதிப்பற்றவைகளாய் உள்ளன. நமது காதுகள் தேவனுடைய செய்தியைக் கேட்டிருக்கின்றன. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிற ஆவிக்குரியவைகளை பகுத்துப் பார்க்கும் திறனை நாம் அடைந்திருக்கிறோம். இந்த ஆவிக்குரிய காரியங்களை ஜென்ம சுபாவக்கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் அவர்களுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை (1கொரிந்2:9). தற்கால தீமையின் உலகத்தில் உள்ள அனைத்துக் காரியங்களும் தற்காலிகமானவைகளே. தற்போது வாசலருகே நிற்கின்ற புதிய யுகம் ஸ்தாபிக்கப்படும்பொழுது, அவைகள் அகன்றுபோகும். இதன் காரணமாக, பூமிக்குரிய மேன்மைகளும் அதிகாரங்களும், வல்லமைகளும் ஒவ்வொரு நிமிடமும் மதிப்பற்றவைகளாகின்றன.

இதற்கு மாறாக, தேவன் நமக்கு அருளுகின்றவைகள் நித்தியமானவைகள் என்று நாம் காண்கிறோம். போதனைகளின் முக்கியத்துவத்தை வேதாகமம் நிர்ணயிப்பதில் ஏதாவது ஆச்சரியம் இருக்கிறதா ? யார் நிஜமான வேதாகம கண்ணோக்கத்திலிருந்து போதனைகளை தன் மனதில் ஆழமாய் பதிய வைத்திருகிறார்களோ, அவர்கள் கர்த்தருக்குள் பலப்படுகிறார்கள். யார் இராஜ்யத்தின் இந்த அறிவையும், இந்த ஆவிக்குரிய பார்வையையும், காதுகளையும் பெறவில்லையோ அவர்கள் பலவீனமடைவதைத் தவிர்க்கமுடியாது, இதனால் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளான புதுசிருஷ்டிகள் என்ற சாட்சியத்தை அடைவதில் குறைவுபடுகிறார்கள் – 2கொரிந்5:17.

———————————

**R 2870**

## நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள்
## THE WATERED LILIES

நந்தவனத்தில் ஓர்நாள் எஜமான்
லீலி புஷ்பங்கள் நடுவினில் உலாவினாரே,
லீலிச்செடிகள் அனைத்தையுமே,
அவர்தம் கரத்தினால் நட்டுப்பயிரிட்டாரே,
அதன்மீது அலாதி கவனம்வைத்து அதனைப்
பேணியே வளர்த்து காத்துவந்தாரே,
அதன் வெண்ணிற மலர்களின் மீதே
மிகவும் ஆவல்கொண்டிருந்தாரே,
கண்ணும் கருத்தும் தோட்டத்தின்மீதே,
செடிகளுக்கிடையில் இருந்ததுவே,
மலர்களை ஆர்வமாய் தொட்டுத்தொட்டே
வருடிக்கொடுத்தே வளர்த்தாரே,
அச்செடிகள் யாவும் வாடி வதங்கி,
காய்ந்தே விழுந்திட்டபோதினிலே, எஜமான்
அந்தச்செடிகள் யாவையும் தூக்கிநிறுத்தி,
உனக்கு நீர் பாய்ச்சுதலே, இன்றெனக்கு ஓர்
முக்கிய வேலை என்றாரே,
இன்று என் லீலி புஷ்பங்களுக்கே நீர்பாய்ச்சிட வேண்டுமே, எப்படி
நான் நீரினைக் கொணர்வேன் ?
என்றே எண்ணிச் சுற்றிலும் பார்க்கையில்,
காலியாகவே, மெல்லிய சிறியதோர் மட்பாண்டம்
பாதை அருகினில் கிடந்ததுவே,
அதனால் ஏதும் பயனில்லை
என்றெண்ணியே அதனைத்தூக்கி வீசினரே,
அது மிகவும்சிறியதாகவே வெற்றுக்குடமாய் இருந்ததுவே,
அப்படித்தான் வெற்றுக்குடமாய்
அக்குடமும் இருக்கவே விரும்பியதே.

**அது ஒரு பூமியின் மட்கலயம்**
மிகவும் சிறியதாய் வெற்றுக்குடமாய்,
எஜமானுக்கருகினிலிருந்ததுவே,
காலியாகத்தான் அது இருக்க விரும்புதே,
எஜமான் அதனை நீர் வீழ்ச்சிக்கு எடுத்துச்சென்றே, விளிம்புவரை
நீர் பிடித்தாரே,
சிறுசேவை ஒன்றை செய்திட்டோம் என்றே
கலயம் மகிழ்ச்சி கொண்டதுவே,
அவர் கையினால் நீரினை எடுத்துவந்தே,
தாகம்கொண்ட செடிகளுக்கே ஊற்றித்
தாகம் தீர்த்துவைத்தாரே, நீர் வீழ்ச்சிக்கோர் சேதி சொல்லவே,
கலயம் தன்னைப் பணித்தாரே,
கலயம் அவற்றின் காதினிலே,
மெதுவாய் செய்தி கூறியதே
அவர் என்னைத் தரையினில் வைக்கையிலே,
அவர் போகிற பாதையில் கிடப்பேனே,
எஜமானுக்கருகினில் இருப்பேனே,
வெறுமையாகவே கிடப்பேனே,
என்றாவது ஓர்நாள் என்னைத்தான்,
மீண்டும் கையினில் எடுத்துத்தான்,
பூத்துக்குலுங்கும் செடிகளுக்கே,
தண்ணீர் வார்ப்பார் என்னாலே,
பயன்படுத்துவார் என்னைத்தான்.
அதுவரையில் நான்தான் பொறுத்திருப்பேனே.

———————————

**R 5952**

# தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம்

## A PLOT THAT FAILED

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 23:14–24

நிராகரிக்கப்பட்ட மனிதனின் சீற்றம் – ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பரிசுத்த பவுல் – கடிந்துகொள்ளப்பட்ட பிரதான ஆசாரியன் –ஒரு படைத்தளபதி போல பரி.பவுல் – கருத்தில் பிளவுபட்டிருந்த ஆலோசனை சங்கம் – சங்க உறுப்பினர்கள் மத்தியில் நிலவிய மாறுபட்ட கருத்து – அப்போஸ்தலர் கோட்டைக்கு திரும்ப கொண்டு போகப்படுதல் – தரிசனத்தால் உற்சாகமடைதல் – அவருக்கு எதிரான சதித்திட்டம் – சதித்திட்டம் தொடர்பாக சேனாதிபதி லிசியாவிற்கு தகவல் கொடுத்தல் – பரி.பவுல் பாதுகாப்புக் கருதி செசரியாவுக்கு அனுப்பப்படுதல்.

“அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் ” – எரேமியா 1:19

பரிசுத்த பவுல் கலகத்திலிருந்து ரோமப் போர்வீரர்களால் தப்புவிக்கப்பட்டதற்குப் பின், மறுநாள் காலையில் அவருடைய வழக்கை திட்டமாய் விசாரிக்கவேண்டி, மிகுந்த குழப்பத்திலிருந்த சேனாதிபதி லிசியா ஆலோசனை சங்கத்தைக் கூட்டினார். இந்தமுறை பிரச்சனை மதம் சார்ந்த ஒன்று என்றும், அவருடைய பணி சமாதானத்தை காப்பது மாத்திரமே என்பதையும் அவர் உணர்ந்தார். யூதர்களுக்கு முன்பாக, அதிலும் அவர்களில் மிகவும் படித்த அறிஞர்கள் மற்றும் மிகவும் செல்வாக்கு நிறைந்த எழுபதுபேர் அடங்கிய நியாயாசனத்திற்கு முன்பாகவும் சுவிசேஷத்திற்காக சாட்சி கொடுக்கும் மேலான வாய்ப்பு பரி.பவுலுக்கு மற்றுமொருமுறை வழங்கப்பட்டது. இந்தமுறை தன்னுடைய கடுமையான அனுபவங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும் மேலான வாய்ப்புக்களில் தன்னை வழிநடத்தும் என்று உணர்ந்துகொள்ளத் தொடங்கினார்.

விசுவாசப் பார்வையுடன் பின்னோக்கிச்சென்று பார்க்கும்போது, அது ஆதிமுதற்கொண்டு கர்த்தர் தம்முடைய பணியை மேற்பார்வையிடுகிறதைப்போல எப்போதும் மேற்பார்வையிடுவார் என்று நாம் உணர்ந்துகொள்ளலாம். விசுவாசக்கண்ணில் நாம் பெற்றுக்கொள்ளவும் உபயோகிக்கவும்கூடிய கர்த்தருடைய வேலையை எது உருவாக்குகிறது என்பது நம் அறியும் அளவுக்கேற்பவே இருக்கும். தெய்வீக திட்டமானது இந்த நிகழ்கால யுகத்தில் உலகத்தை மாற்ற முயற்சிப்பதல்ல என்பதை நாம் கண்டிப்பாக கவனிக்கவேண்டும். மாறாக, கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின்போது நிறைவேற்றப்படும் அந்த பணியை, எதிர்காலத்திற்கு விட்டுவிடவேண்டும். இந்த நிகழ்காலயுகம் முழுவதிலும் அவருடைய பணி, அவருடைய மணவாட்டியாக இருக்க.. அவருடைய இராஜ்ஜியத்தில் அவருடன் கூட்டாளியாக... பிறகு முழு உலகத்திற்கும் நிறைவேற்றி முடிக்கக்கூடிய மாபெரும் பணியில், அவருடைய உடன்வேலைக்காரர்களாக இருக்கும் சபையை தெரிந்தெடுத்தல் மாத்திரமே என்பதை நாம் கண்டுணரவேண்டும்.

பரிசுத்தபவுல் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு தன்னுடைய தேசத்தின் தலைவர்களுக்கு அறிவிக்கும் வாய்ப்பு என்று உணர்ந்து, அதை ஞானமானமுறையில் பயன்படுத்திக்கொள்ள ஆவல்கொண்டார். அது முதற்கொண்டு அவருடைய பேச்சை கேட்க குழுமியிருந்த ஜனங்களிடத்தில் உறுதியான பார்வையோடு அவருடைய முகத்தோற்றம் மிகுந்த ஆவல்கொண்டிருந்தது. அவர் ஒரு உண்மை யூதனாக இருந்ததை அவர்களுக்கு நினைப்பூட்டுவதன் மூலம் ஆரம்பித்தார். அவர் சட்டதிட்டங்களை மீறுபவராயிராமல், அவர் ஆலோசனை சங்கத்தை “சகோதரர்களாக” முகவரியிட்டு அழைத்ததன்மூலம் மதப்பற்று மற்றும் பொதுவான கல்வியறிவு ஆகிய விஷயங்களில் தன்னை அவர்களோடு சமமாக்கிக்கொண்டார். உண்மையாக, பரிசுத்த ஸ்தேவான் கல்லெறியப்பட்ட சமயத்தில் தர்சீசின் சவுலாக இருந்து, ஆலோசனை சங்கத்தின் ஒரு உறுப்பினராகவே இருந்தவர்.

### ஒருவரையும் தீது சொல்லாயாக

பரிசுத்த பவுல் பேசஇருந்த சொற்பொழிவு பிரதான ஆசாரியரால் தடைசெய்யப்பட்டு, பவுலின் வாயில் அடிக்கும்படி அப்போஸ்தலருக்கு அருகில் நின்றிருந்தோரிடம் அவர் கட்டளையிட்டார். அது அவமதிப்பின் விசேஷக் குறியீடாகவும், பேசப்பட்ட வார்த்தைகளுக்கு எதிரான எதிர்ப்பாகவும் இருந்தது. இது குறிப்பாக, பரிசுத்த பவுலால் கண்டித்துரைக்கப்பட்ட பிரதான ஆசாரியன் தன்னுடைய சொந்த நடத்தையை உணர்ந்ததாலேயே என்று கருதுவது தவறல்ல. மாறாக நம் போதகர் அறிவித்ததுபோன்று, “இருள் வெளிச்சத்தை பகைக்கிறது” என்பதனாலேயாகும். பிரதான ஆசாரியனான அனனியாவை, இழிவான வகையில் பாசாங்கு மூலம் மோசடி செய்வதை அடிப்படை பாணியாக கொண்டிருந்தான் என்றும், இருப்பினும் அவனை பொதுவாக ஜனங்கள் உயர்வாக கருதவேண்டும் என்பதில் மிகவும் கைதேர்ந்தவனாயிருந்தான் என்றும் ஜோசபஸ் குற்றப்படுத்துகிறார். சடுதியில் தன் பேச்சை பரிசோதித்து, அப்போஸ்தலர், “வெள்ளையடிக்கப்பட்ட சுவரே; தேவன் உம்மை அடிப்பார்” என்று சத்தமிட்டு கூறினார். அந்த தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று. இரண்டு வருடத்திற்குள் அனனியா பதவிநீக்கம் செய்யப்பட்டான். ஆறு வருடங்களுக்குள் அவன் ஒரு கொடூரமான மரணத்தை சந்தித்தான். அவனுடைய சொந்த மகனே அவனுடைய அரசியல் சதிகாரர்களுடன் இணைந்து, அவனை அவன் பதுங்கியிருந்த இடத்திலிருந்து வெளியே இழுத்து சாக்கடைக்குள் தள்ளி அவனை கொலைசெய்தான்.

இங்கு “வெள்ளையடிக்கப்பட்ட சுவர்” என்ற சொல், கற்பலகைகளில் எழுதப்பட்டு மூடப்பட்டுள்ள சாதாரண கல்லறைகளில் தாங்கி நிற்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இவைகள் யூத வழக்கத்தின்படி யாதொரு வழிப்போக்கர்களும்

அவைகளை காலால் மிதித்து, அதினால் தீட்டுப்படாதபடி சுலபமாக வேறுபாடு அறியும்வகையில் அடிக்கடி வெள்ளையடிக்கப்படுகிறது (எண்19:11–16). சுத்தமாகவும் பளிச்சென்றும் மின்னுகிற வெண்மைநிறக்கல் அழகானதுதான். ஆனால் அதன் கீழ்ப்புறத்தில் அழிவுக்குரியவைகளே உள்ளன. இந்த அடையாளத்தின் வலிமையானது மாய்மாலத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

அப்போஸ்தலரின் அருகில் நின்றிருந்த சிலர், அவர் கூறியதைக்கேட்டு, “தேவனுடைய பிரதான ஆசாரியனை வையுகிறாயா ?” என்றனர். பரிசுத்த பவுல் மறுமொழியாக, “சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியை தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே” என்றார் (யாத் 22:28). இது அப்போஸ்தலர் தமஸ்குவிற்கு போகும்வழியில் தடுத்து நிறுத்தப்பட்டபோது குருடான கண்கள் அவருக்கு இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்பதை நினைப்பூட்டும்(அப்9:8,9).அவருடைய மங்கலான பார்வை அவருடைய “சரீரத்தில் முள்ளாக” இருந்தது. (2கொரிந்12:7–10). கர்த்தர் அவரை அதினின்று விடுவிக்காமல், அதேசமயத்தில் அதை ஈடுசெய்யும் விதத்தில் தெய்வீக கிருபையை அதிகமாக ஈடுகட்டுவதாக வாக்களித்திருந்திருப்பார். தன் ஜெபத்திற்கான இந்த பதிலை அப்போஸ்தலர் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார். எனவே அவர் பிரதான ஆசாரியரை அடையாளங்காண முடியவில்லை என்பதும், முன்வைக்கப்பட்ட அவமதிப்பைக்குறித்து அவர் அறிந்திருக்கவில்லை என்பதும் சாத்தியமே.

### ஒரு பொதுவான ஆனால் அபாயகரமான நடைமுறை

அனனியா பலவந்தத்தினால் தன் அதிகாரத்தை அடைந்ததாக சிலரால் பேசப்பட்டது, இதன் காரணமாக உண்மையான பிரதான ஆசாரியனாக அவர் அங்கீகரிக்கவில்லை என்பதே அப்போஸ்தலரின் வார்த்தைகளிலிருந்து வெளிப்படும் அர்த்தமாக புரிந்துகொள்ளப்படுகிறது. பரிசுத்த பவுல் அவருடைய வார்த்தைகளுக்காக மன்னிப்பு கோராமல், உன் அதிகாரியை தீது சொல்லாயாக என்ற தெய்வீக பிரமாணத்தை முழுமையாக புரிந்துகொண்டிருப்பதாக பிந்தைய கண்ணோட்டம் குறிப்பாய் சுட்டிக் காட்டுகிறது.

இது இன்றைய நாளில் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல விதிமுறையாக உள்ளது. உயர் பதவியிலிருப்–பவர்களைப்பற்றி தீமையானவற்றை பேசுவது, அவர்களை சிறுமைப்படுத்துவது, கேலிக்குள்ளாக்குவது போன்ற மனப்பான்மை ஒரு பொதுப்படையான, எங்கும் பரவியுள்ள பாவமாக இருந்து, ஏளனம் செய்பவர்களைவிட ஒரு நல்ல ஆட்சியை மேலும் அதிகமாக பலவீனப்–படுத்துகிறார்கள். சந்தேகத்திற்கிடமின்றி, நாம் முழுவதும் ஏற்றுக்கொள்ளாத காரியங்கள், மற்றும் வழிமுறைகளுக்கு எதிராக மறுப்புதெரிவிக்க ஏற்ற சமயங்களும் வழிகளும் உள்ளன. ஆனால் தேவனுடைய ஜனம் பிரமாணங்களுக்கும் ஒழுங்குமுறைக்கும் ஒப்புயர்வற்ற நிலையில் நின்று, இராஜாதி இராஜா தன் ஆயிரவருட சிங்காசனத்தில் அமரும்வரை, எந்தஅளவிற்கு நீதியை அடைய இயலுமோ அந்தளவுக்கு, முழுமையான நீதிக்காக காத்திருக்கவேண்டும். இந்த இடைப்பட்ட காலத்தில் நமக்கு அவருடைய கட்டளையாக; “மேலான அதிகாரமுள்ளவனுக்கு கீழ்ப்படியக்கடவன்” என்றும், முடிந்த அளவு “யாவருடனும் சமாதானமாயிருக்க வேண்டும்” என்பதேயாகும் – ரோம13:1; எபி 12:14.

தற்செயலாக நாம் குறிப்பிடுவது என்னவென்றால், சிலர் கர்த்தரையும், வேதத்தையும் தாக்கும்படி வேடிக்கையாகவும் பேசுகின்றனர். இது ஒரு அபாயகரமான செயல்முறை. “கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்”. இந்த பயப்படுதல் நமக்குள் தொடர்ந்து செயலாற்றி, கர்த்தரை நேசிப்பவர்களுக்கும், அவருக்கு பயப்படுகிறவர்களுக்கும் தேவன் முன்கூட்டியே ஏற்பாடுசெய்து வைத்துள்ள மகிமையான காரியங்களை அடைய தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொண்டு, வருஷங்கள் செல்வதற்கேற்ப அதில் அதிகரிக்கவும் வேண்டும்–யோபு28:28; சங் 111:10.

### பரிசுத்த.பவுலின் சமயோஜித புத்தி

சுவிசேஷத்தை எடுத்துரைப்பதற்கு அதன் துவக்கத்தில் இந்த சம்பவம், நம்புகிறவர்களுக்கு தடையை ஏற்படுத்தியிருந்தது. பரி.பவுல் தனக்கு எதிராக இருந்த தவறான அபிப்பிராயமானது, தன் பேச்சை செவிமடுத்தவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று உணர்ந்துகொண்டார். அவர்கள் பிரதான ஆசாரியனால் அடக்கி ஆளப்பட்டிருந்தனர். நீதியில் குறைபாடு உள்ளவர்களாக காணப்பட்டவர்கள் அதை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்திக் காண்பித்தனர். ஒரு படைத்தளபதி முன்புறமாக தாக்குவதில் எந்த பலனுமில்லை என்பதைக்கண்டு, தன் படைகளை முடுக்கிவிட்டு, பக்கவாட்டில் தாக்கி, எதிரியை ஜெயிப்பதுபோல, பரி.பவுலும் தனக்கு செவிமடுத்தவர்களில் பாதியளவினரின் அனுதாபத்தை முழுமையாக பெற்றிருந்தார். அதேசமயத்தில், தான் போதித்த போதனை பரிசேயர்களின் பெரும்பான்மையான நம்பிக்கையின் தர்க்கரீதியான வெளிப்பாடாக இருக்கிறது என்பதை காண்பிக்கிறதற்கான வாய்ப்பையும் தக்கவைத்துக்கொண்டார்.

அப்போஸ்தலர் இதை மிகுந்த சத்தமிட்டு,“நான் பரிசேயனும், பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்; மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நியாயம் விசாரிக்கப்படுகிறேன்” என்று கூறினார். இவ்வாக்கியம் துல்லியமான உண்மையே ஆகும். பரிசேயன் என்ற வார்த்தை தேவனுக்கென்று முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்டதை உரிமை கொண்டாடுகிறவன் என்பதை அடையாளப்படுத்துகிறது. பரி.பவுல் இந்த மனப்பான்மையை ஒருபோதும் அழித்துவிடாமல் தொடர்ந்து காப்பாற்றிவந்தார். தமஸ்துவுக்கு செல்லும் வழியில் பெற்ற அவருடைய அனுபவங்கள் அவருடைய நடத்தையின் வழிமுறையை, முதலாவது தேவனுக்கு முன்பாக “எல்லா விஷயங்களிலும் நல்மனசாட்சியோடு” உண்மையாயிருப்பது என்ற அவருடைய இருதய மனப்பான்மையை மாற்றவில்லை.

ஆலோசனை சங்கமானது புராதன நம்பிக்கைகளை தீவிரமாக கடைப்பிடிக்கிற, பரிசுத்தத்தை வெளிப்படையாக

பறைசாற்றுகின்ற பரிசேயரையும், ஆசாரியர்களோடு சேர்த்து மிகவும் உயர்ந்த யூதர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையிலுள்ள நாத்திகரையும், பெருமளவில் குற்றங்காண்கிற சதுசேயரையும் சமபங்காக கொண்டுள்ளது என்பது பரி.பவுலுக்கு மிகவும் நன்றாக தெரியும். அவருடைய கூக்குரலுக்கான பலன் உடனடியாக கிடைத்தது. பரிசேயர்கள் பவுல் பேசினவைகளில் சில காரியங்கள் தங்கள் நம்பிக்கைக்கு ஏற்புடையதாக உள்ளதாக ஏற்றுக்கொண்டாலும், அவருடைய எல்லா போதனைகளுக்கும் அவர்கள் உடன்படவில்லை. அதுபோலவே சமய நம்பிக்கையற்ற சதுசேயர்களுக்கும் ஒழுங்கற்ற பரிசேயர்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு, அவர்கள் காலதாமதமின்றி இறுதிக்கட்ட நிகழ்விற்கு காரணமாயிருந்து, அதற்கு ஆதரவளித்தனர்.

அதன் விளைவாக, ஒரு பெரிய கலகம் உண்டானது. சிலர் அப்போஸ்தலரின் ஜீவனை எடுக்க வகைதேடினர். மற்றவர்களோ அவரை பாதுகாக்க பெருமுயற்சி செய்தனர். சண்டையிடும் தேவனுடைய ஜனங்களின் பிரிவுகளிடையே மீண்டும் ஒருமுறை தலையிட்டு தடுத்து நிறுத்த சீசரின் (Ceasar) போர்வீரர்கள் தேவைப்பட்டனர். எப்படிப்பட்ட சோகமான காட்சி இது! தெய்வீக அறிவுரைப்படி நடந்து, ஒவ்வொரு வழியிலும் அதிக அனுகூலம் பெற்றிருக்கவேண்டிய யூதர்கள், நீதியைக்குறித்தும், ஒருவருக்கொருவர் பெற்றிருக்கவேண்டிய உரிமைகளைக் குறித்தும் கூறப்பட்ட பாடங்களை புறக்கணித்ததும் எவ்வளவு துயரகரமானது! "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" (லேவி19:18) என்ற தெய்வீக அறிவுரையை சுட்டிக் காண்பிக்காமல் நடந்துகொண்டதும் எத்தனை பரிதாபமானது! இது சிலசமயங்களில் உண்மைக் கிறிஸ்தவர்கள் தெய்வீக நிலைகளில் மிகுந்த மதிப்புயர்வடைந்து, உடன்படிக்கையின் உறுதிமொழியின் கீழிருந்து சகோதரர்களுக்காக தங்கள் ஜீவனை கொடுக்கவும் உண்மையாகவே உற்சாகப்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் சத்துருக்களையும் சிநேகிக்கின்ற நிலையை அடையாவிட்டால், தாங்கள் நாடித்தேடிய பரிசை வெல்லமுடியாது என்ற புத்திமதி, கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் உண்மையானது என்பது எப்படிப்பட்ட வருந்தத்தக்க காரியம்!

உண்மையாகவே குத்துச்சண்டையிடுபவர்கள் இன்று நாகரீகமான ஜனங்கள் மத்தியில் மிகவும் பிரபலமற்றவர்களாகவே கருதப்படுகின்றனர். ஆனால் கையால் செய்யமுடியாத கொடூரத்தை வார்த்தையால் அதைவிடக் கொடூரமாக செய்ய முடியாதோ? கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டு தேவனுடைய சித்தம் செய்வதாக உடன்படிக்கையின் உறுதிமொழியை எடுத்துக்கொண்டவர்கள் மத்தியிலும், எதிராளியின் ஆவியின் தூண்டுதலின்கீழ், கோபம், விரோதம் வெறுப்பு, பொறாமை, சச்சரவு ஆகியவற்றை வெளிப்படுத்துவதால், ஒருவர் மற்றவரை மென்று விழுங்கிவிடுவது உண்மையல்லவா? இக்காரியங்களை நாம் காணும்போது, இவைகள் மூலம் விலைமதிப்பற்ற பாடத்தைக்கற்று நம்முடைய பரமபிதாவை இன்னும் நன்முறையில் மகிமைப்படுத்த நம்மைத் தூண்டாதா?

**அம்பலப்படுத்தப்பட்டதும், தோற்கடிக்கப்பட்டதுமான ஒரு சதித்திட்டம்**

அப்போஸ்தலர் பாதுகாப்புடன் திரும்பவும் கோட்டைக்கு கொண்டுவரப்பட்டபோது, தன்னுடைய சமீபத்திய அனுபவம் மூலம் எவ்வகையில் கர்த்தர் மகிமைப்படுத்தப்பட்டிருப்பார் என்பதை கண்டு வியப்படைந்தார். நம்மிடையேயும் இப்படிப்பட்ட எண்ணங்கள் அடிக்கடி எழும். ஆனால் எங்கு கர்த்தருடைய வழிநடத்துதலை அடையாளங் காணவும், அதன் பலனை காணவும் முடியவில்லையோ, அங்கு, "என்ன வந்தாலும் அவரை உறுதியாக நம்புவேன்" என்ற விசுவாசத்தை வளர்ப்பதற்கான எல்லாவிதமான சிறந்த வாய்ப்பையும் நாம் பெற்றிருக்கிறோம்.

இதற்கிடையில், தன்னுடைய கைதி சாதாரணமான மனிதன் அல்ல என்பதை சேனாதிபதி லிசியா சான்றுடன் அறிந்துகொண்டார். யார் ஒருவர் அமைதியாக, எச்சரிப்பாக, கண்ணியமாக, தாழ்மையாக, தன்னடக்கமுள்ளவராக இருந்து, தன் எதிரிகள் இவைகளுக்கு மாறாக இருக்கும்போதும், அதே நிலையிலிருக்கிறாரோ, அவர் வாத எதிர்வாதத்தில் பெரும்பாலும் நேர்மையின் பக்கத்திலிருந்து களங்கமற்ற சிந்தை உடையவராக இருப்பதற்கு சான்றாக அமையும். பரி.பவுலை நோக்கிப் பார்த்திருந்த ரோம அதிகாரியின் மனப்பான்மையில் ஏற்பட்ட இந்த மாற்றமானது, 40பேர் கொண்ட குழு பவுலின் ஜீவனை எடுக்க சதிதிட்டம் தீட்டிய செய்தியை கொண்டுவந்த, தன் சகோதரியின் மகனை மிகவும் அன்பாக நடத்தியதன் மூலம் வெளிப்பட்டது.

இந்த சதிகாரர்களாகிய மத வல்லுனர்கள் 40பேர், "உன்னிடத்தில் அன்புகூறுவதுபோல பிறனிலும் அன்புகூறுவாயாக" என்ற தெய்வீகப்பிரமாணத்தை முழுவதும் மறந்து, ஒருவரோடொருவர் கட்டப்பட்டவர்களாக, ஒரு ஆணைமூலம் தங்களை இணைத்துக்கொண்டு, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக்கொண்டனர். ஆனால் பவுலோ அவர்களுக்கு எந்த தீங்கும் இழைக்காமல், அதற்கு மாறாக, எந்த அளவு ஞானமாக செயல்பட இயலுமோ அந்தஅளவுக்கு அவர்களுக்கு நன்மை செய்ய மாத்திரமே பெருமுயற்சிசெய்தார். அப்போஸ்தலரின் சகோதரியாகிய தன் தாயின் வேண்டுகோளின்படி அந்த சிறுவன் கோட்டைக்குள் தொடர்புகொள்ளக்கூடிய வாய்ப்பைப்பெற்று, கலகத்தைப்பற்றி தன் மாமனுக்கு விவரித்து, பிறகு படைத்தலைவரிடம் அனுப்பப்பட்டான். அதன்பிறகு அந்த சிறுவனுடைய கையைப்பிடித்து தனியே அழைத்துக்கொண்டுபோய், பவுலைப்பற்றிய

விபரத்தை அறிந்து, இவைகளை ஒருவருக்கும் சொல்லாதே என்று கூறி, அவனை அனுப்பிவிட்டான்.

குறைந்தபட்சம் பாதியளவு செல்வாக்கு மிகுந்த யூதர்களோடு மோதலில் ஈடுபடவேண்டியிருக்கும் என்பதை உணர்ந்த படைத்தலைவன், செசரியாவில் ரோம தேசாதிபதியாக இருந்த பெலிக்ஸின் பாதுகாப்பின்கீழ் தன் கைதியை வைப்பது விசாரணையை நடத்த ஞானமான செயலாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தான். ஆகையால் இரவு 9 மணியளவில், 200 காலாட்கள், 200 ஈட்டிக்காரர்கள், 70 குதிரை வீரர்களோடு அப்போஸ்தலரை ஏற்றிக்கொண்டு புதிய இடத்திற்கு அனுப்பி, அங்கே கட்டப்பட்டநிலையில் தன் மாபெரும் போதகருக்கு பிரதிநிதியாகவும், தூதுவராகவும், தன்னை எண்பித்து, புதிய வாய்ப்பை பெற்றிருந்தார்.

நமக்கு தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைக்காட்டிலும் இயற்கையானவைகளை உபயோகிக்க முன்னுரிமை அளிக்கிறார். இதனால் அவருடைய பிள்ளைகள் அனைவரும் ஒவ்வொரு கனப்பொழுதிலும் அவர் நிமித்தமாக ஊழியஞ்செய்ய விழிப்பாய் இருக்கவேண்டும் என்பதையும் காண்பிக்கிறது. தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறித்தீரும். ஆனால் கர்த்தருக்கோ அல்லது தன் சகோதரர்களில் மிக சிறியவருக்கோ எந்த ஊழியமும் செய்கிற சிலாக்கியத்துக்கு பாத்திரனாக எண்ணப்படுகிறவனுக்கே மகிழ்ச்சி உண்டாகும். ஆகையால், நாம் ஆராய்ந்தறியும் நோக்கமுள்ள சிந்தையோடு, தொடர்ந்து நோக்கிப்பார்த்து, தெய்வீக சித்தத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கும்போது, நம்முடைய வாழ்க்கையையும் விருப்பங்களையும், நியாயமாகவும் முறையாகவும் பாதுகாத்துக் கொள்வதோடுகூட, பிறரையும் ஆதாயப்படுத்துவோம் என்ற பாடத்தை அப்போஸ்தலர் சந்தேகத்திற்கிடமின்றி கற்றுக்கொண்டார். நாம் அனைவரும் ஆதாயமடையும்படி இவற்றை சிந்தித்துப்பார்ப்போமாக!

--------------------

**R 5955**

# ஆவிக்குரிய பெருமையினால் வரும் ஆபத்து

## DANGER IN SPIRITUAL PRIDE

தற்பெருமை யாருக்குள் எவ்வகையிலும் இருந்தாலும் அது அபாயகரமானது. நீதிமொழி உலக வழியில் உறுதிமொழி கூறுகிறது; "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுகைக்கு முன்னானது மனமேட்டிமை". நியாயமாகப் பார்க்கும்பொழுது, வெகுசிலரே பெருமை பாராட்டும்படி ஏதாகிலும் தகுதியடைந்திருப்பதாக நிச்சயம் கருதலாம். தாங்கள் "பூமியின் தூளினாலே" சிருஷ்டிக்கப்பட்டு உண்மையாகவே தங்களை பெருமைப்படுத்த ஒன்றுமில்லாதபோதிலும், சிலர் தலைக்கனம் பிடித்தவர்களாக கர்வத்தின் ஆவியை உடையவர்களாயிருக்கின்றனர். சில முற்கால சந்ததியினர், பொதுவாக தங்களை உயர்த்திக்கொள்ள தகுதியுடையோராய் இருந்தனர்.

ஐஸ்வரியத்தின் தற்பெருமை ஞானமானதல்ல என்று உலகம் கற்றுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு இல்லாவிடில் இந்த ஐஸ்வரியங்கள் எப்படி, யாரால் குவிந்தது ? அவைகள் நேர்மையாக சம்பாதிக்கப்பட்டவைகளா என்று யாராகிலும் கேட்கக்கூடும். பொதுவாக கல்வி என்பது ஜனங்கள் கண்டடைந்ததை அல்லது வரலாற்றில் எழுதியிருந்ததை கற்பதை முக்கியப்படுத்துவதால், கல்வியைக்குறித்து பெருமை பாராட்டுவது பொருத்தமாயிருக்காது. இன்றைய நாளில் அதிகப்படியான கல்வி கற்றதைக்குறித்து பெருமைப்படுகிறவர்களுக்கு



தாழ்மை தேவையாய் உள்ளது. இல்லாவிடில் தாங்கள் பெருமை பாராட்டுகிற அதே காரியத்தைக்குறித்து வெளிப்படும் பிந்தைய ஆராய்ச்சிகள் தவறு என்று நிரூபித்துவிடும். கிபி 1900ம் வருடம் வெளிவந்த விஞ்ஞான புத்தகங்கள் இன்றைக்கு ஜனங்களை ஒரே கருத்தில் ஒருமித்து சேர்க்க முடிவதில்லை. தற்போதைய அறிவின் வெளிச்சத்தின்முன்பாக அவர்களது கோட்பாடுகள் நிலைநிற்பதில்லை. ஆகவே தன் அறிவைக் குறித்து மேன்மைபாராட்டுவதை ஒருவன் சரியானதாக கருதுவானாகில், இன்றுவரை உள்ள அறிவை பெற்றுக்கொள்ள மிக கவனத்துடன் இருக்கவேண்டியது அவசியமாகிறது.

தன் அழகைக்குறித்தோ அல்லது சரீர ரீதியான பூரணத்தைக்குறித்தோ ஒருவர் மேன்மை பாராட்டுவாராகில், மிக அரிதாக மன்னிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் வடிவமைப்பின் அழகு மற்றும் முகத்தோற்றம் மரபுரீதியாக வருகிறது. தங்கள் குழந்தைகளைக் காட்டிலும் பெற்றோர் பெருமைகொள்ள சில காரணங்கள் உள்ளன. ஆடை அணிந்துகொள்வதிலும், அலங்காரம் செய்து கொள்ளுதலும் உள்ள பெருமை முட்டாள்தனமாகவே இருக்கும். ஏனெனில் அந்த துணியை அல்லது அணிகலன்களை உற்பத்திசெய்தவரே தன் கைத்திறனுக்காக பெருமைகொள்ள சில காரணங்களுண்டு, நிச்சயமாக அதை அணிபவருக்கு உரியதல்ல. மற்றவர்களது உழைப்பிலும் திறமையினாலும் உண்டாக்கியதை அணிந்து, தனக்கு அதை பொருத்திப் பார்க்கிறார்.

### ஆவிக்குரிய பெருமையே எல்லாவற்றிலும் மிக மோசமானது

ஆனால் ஆவிக்குரிய பெருமையே நம்முடைய கருப்பொருளாயிருக்கிறது. இதனை நாம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கலாம். (முதலாவது, பெயரளவிலான அல்லது நியாயமில்லாதவகையில் உரிமை கொண்டாடுகிற

கிறிஸ்தவர்களின் பெருமை, இரண்டாவது, உண்மை கிறிஸ்தவர்களை பாதிக்கும் ஆவிக்குரிய பெருமை.

பெயர்கிறிஸ்தவராக இருந்து, தினமும் ஆலயத்துக்கு செல்பவரது ஆவிக்குரிய பெருமை அனைத்தும் மாய்மாலமானதல்ல. ஏனெனில் அவன் ஆவிக்குரிய தோற்றங்களையும் சடங்குகளையும் காண்கிறான். ஆவிக்குரிய பாடல்களையும், பிரசங்கங்களையும் கேட்கிறான். அநேக தருணங்களில் எச்சரிக்கையாய் இல்லாவிடினும், மற்ற அநேகரோடுகூட தன்னையும் உண்மை கிறிஸ்தவனாக எண்ணுகிறான். அவன் சபை கூடுகையில் ஒரேசீராக கலந்துகொள்ளவில்லையா ? சபைக்கு ஒழுங்காக தன் பங்களிப்பை செய்யவில்லையா ? தன்னுடன் தேவனைத் தொழுதுகொள்கிறவர்களுடைய நலன்களுக்காக மட்டுமல்ல, கர்த்தர் நிமித்தமாக தர்மச்செயல் போன்றவற்றில் தன் பங்காற்றி, ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்துவந்தாரல்லவா!

ஆயினும், அந்த வாரத்தின் இடைநாட்களில் அவர்கள் எப்படி ஜீவித்திருந்தாலும் இறைச்சிக் கடைக்காரரிடமும் ரொட்டிக்கடைக்காரரிடமும் எப்படி நடந்து கொண்டிருந்தாலும், ஆலயங்களுக்கு செல்வோரில் பெரும்பான்மையோர், சபைக்கட்டிடங்களை நோக்கி நகர்கின்ற பார்வைகொண்ட பகட்டான வகுப்பாராக, உல்லாசமான பெருமை கொள்கின்றனர். ஆவிக்குரிய பெருமை கொண்டவர்கள் பொதுவாகவே ஆடம்பரத்தை விரும்பி, செல்வாக்காலும் உயர்குடியில் பிறந்தவர்களாக தங்களை காண்பிப்பதிலும், உரக்கப்பேசும் ஆலயங்களில் தொழுதுகொள்வதையே தெரிந்தெடுக்கின்றனர். அந்த வழிபாடுகள் முடியும்போது, அவர்கள் சுயதிருப்தி அடைகின்றனர். அவர்கள் தேவனை தொழுது கொள்ளவில்லையா ? அவரை எல்லா ஜனங்களும் தொழுது கொள்ள வேண்டாமா ? மற்ற ஜனங்களில் எத்தனைபேர் அவ்வாறு தொழுது கொள்ளாதிருக்கின்றனர்! ஆராதனையில் கலந்துகொள்ளாதவர்களோடு தங்களை ஒப்பிட்டுப்பார்த்து, தாங்கள் உயர்ந்தவர்களென கருதி ஆவிக்குரிய மேட்டிமை கொள்வர்.

அவர்கள் ஆவிக்குரிய அறிவுரையைப் பெற்றுக்கொள்ள செல்லவில்லை. அல்லது அவர்கள் சென்று வழிபடும் ஸ்தலங்களில் அப்படிப்பட்ட அறிவுரைகள் கொடுக்கப்பட்டாலும், அதை பெற்றுக்கொள்ளும் மனநிலையில் இவர்கள் இல்லை. இவர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டோரல்லர். நீதியின்பேரிலும் சத்தியத்தின் பேரிலும் அவர்கள் உண்மையான பசிதாகம் அடையவில்லை. தங்கள் கடமையை செய்து, திருப்தியடையும் மனநிலையை மட்டுமே இவர்கள் பெற்றிருந்தனர். எப்படியாகிலும் சிலசமயம் அனுகூலத்திற்கென்று இந்த சடங்குகள் பழக்கமாகிவிடும் என்றும், ஒருவேளை ஆத்மாவை உத்தரிக்கும் ஸ்தலத்தின் மோசமான துன்ப விளைவுகளிலிருந்து மீட்டு, பரலோகத்திற்குள் அவர்களை ஏற்றுக்கொள்ளும்படி பிராயச்சித்தம் செய்யும் உணர்வை அடைவோம் என்றும் நம்பியிருந்தனர். அவர்கள் தங்களை வெறுத்து, தங்களுடைய விலையேறப்பெற்ற சிலமணி நேரங்களை செலவழித்து அவரை தொழுதுகொள்ளச்– செல்வதை, தேவன் ஏன் மகிழ்ச்சி உணர்வோடு அங்கீகரிக்கக்கூடாது ?

தேவன் தங்கள் முயற்சியை அங்கீகரிப்பார் என்று அவர்கள் கருதாவிட்டால், இந்த விஷயத்தில் அவர் வெகுமதி அளிக்காமல் அலட்சியம் காண்பித்து, மகா அநீதராயிருக்கிறார் என்று ஓரளவாவது எண்ணுவார்கள். ஆவிக்குரிய விதத்தில் அவர்கள் மேட்டிமையையும், சுயதிருப்தி அடைவோராயும் உணர்வார்கள். இந்நிலைமையிலேயே அவர்கள் நீடித்திருப்பார்களானால், சத்தியத்தைப் பற்றிக்கொள்ளும் நிலைமை எள்ளளவும் ஏற்படாது. ஏனெனில் சத்தியத்தைப் பற்றிக்கொள்வது அவர்களுக்கு அபாயமாய்த் தோன்றும் அல்லது மாபெரும் விரோதியாகிய சாத்தான் அவர்கள்மேல் தன் கவனத்தை செலுத்துவான் என்றும், அவர்கள் அவனுடைய ஆதிக்கத்தின்கீழ் மிகவும் பாதுகாப்புடன் இருப்பர் என்றும் நாம் யூகிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் முதன்முதலாக மேட்டிமையை வெளிப்படுத்தி;

“தேவபுத்திரர்களுக்கும் மேலாக நான் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன்” (மற்றவர்களைக் காட்டிலும் உன்னத ஸ்தானத்தை எடுப்பேன்) என்று தன் இருதயத்துக்குள் கூறினவன் அவனல்லவா! சாத்தானின் மிகப்பெரிய தவறு ஆவிக்குரிய பெருமை வெளிப்படையாக இருந்து, முழு வீழ்ச்சிக்கும் அவனை வழிநடத்தினது.

சிலர் தேவனிடத்திலோ அல்லது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலோ அல்லது வேதாகமத்திலோ விசுவாசத்தின்பேரில் பாசாங்கு செய்யாமலிருந்தாலும், ஒரு வகைப்பட்ட ஆவிக்குரிய பெருமையை அடைந்திருக்கலாம். அவர்கள் ஒரு நன்னடத்தையான ஜீவியம் ஜீவிப்பதில் தங்களுக்குத் தாங்களே பெருமைப்படுவர். ஒருக்காலும் மதுபானம் குடியாமலும், மிக மோசமான ஒழுக்கக்கேடுகளிலும், மற்ற அநேகர் செய்வதுபோல் தெரிந்தே தவறுசெய்வது போன்றவற்றில் ஈடுபடாமலும் இருந்து, வாழ்க்கையில் கண்ணியமாகவும், மேன்மையான நடத்தை உடையவர்களாக நடக்கமுடியும் என்று தங்களுக்குத்தாங்களே காண்பிக்கின்றனர். மேட்டிமையிலும், தங்களையே உயர்த்தியும் அவர்கள் கூறுவது; “எந்த சபை உறுப்பினரைப்போலவே நானும் நல்லவனாக இருப்பதாக உணர்கிறேன், ஆகவே நான் ஒருக்காலும் சபைக்கு செல்லமாட்டேன்” என்று கூறுவதினால், அவர்கள் நமக்கு உணர்த்துவது என்னவெனில், “சபைக்கு செல்லுகிற எந்த உறுப்பினரைக் காட்டிலும் உயர்ந்தவனாக என்னை எண்ணுகிறேன்” என்பதேயாகும். அவர்கள் பெருமையான சிந்தையை தன்னடக்கத்தோடு கலந்து, கேட்கிறவரது மனதில் சிறப்பான செல்வாக்கை சரிவிகிதமாக ஏற்படுத்தும் என்று எண்ணுகிறார்கள்.

அவர்கள் என்னென்ன நற்கிரியைகளில் சந்தோஷப்படுகிறார்கள் என்று விசாரணையை இன்னும் கூடுதலாக்கும் பொழுது, எப்படிப்பட்ட புதுமைவாதிகளும், கட்டிடம் கட்டும் சிற்பிகளுமாய் இருக்கின்றனர் என்று அவர்களே நமக்குக் கூறுவர். பொதுவாகப் பார்க்கும்போது, தாங்கள் பிரமாணங்களுக்கு ஊறுவிளைவிப்பதில்லை

என்பதே அவர்களது மேட்டிமையாகும். அதாவது, அவர்கள் கண்ணியமாகவும் மதிக்கத்தக்க வகையிலும் ஜீவிப்பதாக எண்ணுகின்றனர். தன்னையே விசேஷித்தவிதமாக பாராட்டிக்கொள்ளவும், பெருமை கொள்ளவுமான நிகழ்வு இதில் என்ன இருக்கிறது ?

**உண்மை சபையில் ஆவிக்குரிய மேட்டிமை**

இனி எல்லாவற்றிலும் மேலாக, மிகவும் அபாயகரமான விஷயத்திற்கு நாம் வந்திருக்கிறோம். உலகத்திலும் பெயர்கிறிஸ்தவர்களிலும் மேட்டிமை என்பது வெறுமனே முட்டாள்தனமானது அல்லது அரை பாசாங்கு நிலையை உடையது. இது தேவஜனங்களின் இருதயத்திலும் வாழ்க்கையிலும் ஊடுருவுமானால், மெய்யாகவே மிகப்பெரும் அபாயகரமான காரியமாக இருக்கும். ஆனால் ஏன் நாம் உலகம், பெயர்சபை, உண்மை சபை என, இப்படிப்பட்ட வித்தியாசத்தை உண்டாக்குகிறோம் ? கர்த்தருடைய பரிசுத்தவான்களிடத்தில் ஆவிக்குரிய மேட்டிமை மிகமிக அபாயகரமான ஒன்றாக இருக்கிறது. அதேசமயம் உலகிற்கு இது முட்டாள்தனத்தைக் காட்டிலும் கேடுள்ளது என்று ஏன் கூறுகிறோம் ? ஆ ! வித்தியாசம் என்னவெனில், இவர்கள் தேவனுடைய விசேஷித்த பிரதிநிதிகளாக உலகிற்கு இருக்கின்றனர். மேலும், மகிமை கனம் சாவாமையை அடைவதற்கென்று கர்த்தரால் அழைக்கப்பட்டிருக்கிற இவர்கள், தேவனுடைய நேசகுமாரனுடைய சாயலாக இருக்கவேண்டும்.

மீட்பருடைய பலியின் புண்ணியங்கள் அருளப்பட்டதன்மூலம் பாவத்திலிருந்து நியாயந்–தீர்க்கப்பட்டு, கர்த்தரிடத்தில் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்த பொழுது, தேவகுடும்பத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட்டு, பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்–பட்டார்கள். இவர்களிடத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதே இதன்பொருள். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இந்த சுவிசேஷயுகத்தின்போது, நித்தியஜீவனா அல்லது நித்திய மரணமா என்ற பரீட்சை இவர்களுக்கு மட்டுமே நடைபெற்றுவருகிறது. இவர்களுடைய அனைத்து சோதனைகள் மற்றும் வஞ்சனைகளிலும் ஆவிக்குரிய மேட்டிமையாகிய பாவமே எல்லாவற்றிலும் மிக அபாயகரமானது. இந்த மேட்டிமை உள்ளே வரும் விகிதத்திற்கேற்ப கர்த்தருடைய ஆவி வெளியேறினபிறகு, தனிப்பட்ட நபரது ஆவிக்குரிய தன்மை முற்றுப்பெறுகிறது. இந்த ஆவிக்குரிய நோய்க்கு கடிவாளம் இடாவிடில், இரண்டாம் மரணத்துக்கு நிச்சயமாக வழிநடத்திச்செல்லும். ஏனெனில்,

“பெருமையுள்ளோர்க்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளோர்க்கு கிருபை அளிக்கிறார்” – யாக்4:6.

அப்போஸ்தலர் பேதுரு ஆவிக்குரிய மேட்டிமையின் அபாயம் வளைந்து கொள்வதை சிந்தனையில் நிறுத்தியே, வெளிப்படையாக சபைக்கு எழுதினார்;

“ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்” – 1பேது5:6.

“தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்” என்று நம் போதகர் கூறினார்.

**இந்த ஆத்தும வியாதிக்கான ஒரு அறிகுறி**

ஆவிக்குரிய மேட்டிமையை எப்படி நாம் அறிவது ? என்று யாராகிலும் வினவக்கூடும். ஆவிக்குரிய பெருமையைப் பெற்றிருப்போர், இதனைக்குறித்த விழிப்புணர்வை மிக அரிதாகவே அடைந்திருப்பர் என்பதே மிக அபாயகரமான ஒரு காரியமாக இருக்கிறது. அவர்கள் சிலவேளைகளில் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்திருந்து, மற்றவர்களை வஞ்சிப்பதோடுகூட, தங்களைத்தாங்களே வஞ்சித்துக்கொள்வார்கள். மேலும் அவர்களுக்குள் கிரியை செய்கிற ஆவிக்குரிய மேட்டிமையை மற்றவர்கள் எளிதாகக் காண்கின்ற அதேவேளையில் அவற்றை தான் காணாதபடிக்கு தடை ஏற்படுத்திவிடுவர்.

சபைஆராதனைகளில் கலந்துகொள்ளுதல் மற்றும் அனுதினமும் வேதாகம விளக்கவுரைகளின் அநேக பக்கங்களை படித்தல், அநேக கை பிரதிகளை விநியோகித்தல் அல்லது புத்தகங்களை மற்றவர்களுக்கு சுற்றோட்டம் விடுதல், இப்படிப்பட்ட காரியங்கள் செய்வதன்மூலம் தற்புகழ்ச்சி அடையக்கூடும் என உணர்ந்தால் உங்களையே கவனித்துப்பாருங்கள். இந்த மனநிலை, சூழ்நிலை சாதகமாயிருந்தால் நீங்கள் ஆவிக்குரிய மேட்டிமையை அடைவதற்கான அபாய அறிகுறியாக இருக்கிறது. மேற்கண்ட இவையனைத்தும் நல்லதும், பாராட்டக்கூடியவைகளாயும் முறையானவைகளாயும் இருக்கிறது. அன்றாடம் செய்தித்தாள் படிப்பது, அல்லது நாவல் படிப்பது,சிற்றுரையாடல் படிப்பது, எழுதுவது போன்றவற்றிலிருந்து மனதார விலகுவதும், இவைகளை செய்ய என்னால்கூடும் என்று கண்டறிவதுமாகிய இவைகளை முறையான அளவில் நம்மை நாமே பாராட்டிக்கொள்ளலாம். இப்படிப்பட்ட காரியங்கள், பகுத்தறிவுடன் ஏற்றுக்கொள்ளவும், முறையாகவும், தெய்வீக சித்தத்துக்கு அதிகபட்ச இசைவாயும் உள்ளது. கர்த்தருடைய ஊழியத்தில் தற்பெருமையடிக்கும் குணஇயல்பாகிய இந்த செயல்பாடுகளுக்குப் பின்னால் மறைந்திருக்கிற உள்நோக்கங்கள் என்னவென்று நம்மைநாமே எச்சரிக்கையாக சோதித்தறியும் சிந்தையை அடையும்படி வழிநடத்தப்படவேண்டும்.

நாம் கர்த்தரை நேசிக்கிறோம் என்பதையும் அவருக்கு ஊழியம்செய்ய ஆவலோடு இருக்கிறோம் என்பதையும் பிறருக்கு தைரியமும் உற்சாகமும் அளிப்பதற்காக மனதார விட்டுவிலகிய இக்காரியங்கள் அனைத்தையும் ஒரு தடயமாக வெளிக்கொணர்ந்து சாட்சியமளிப்பது முறையற்றது என்று பொருள்படும் வகையில் நாம் கூறவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்து செய்யும் எக்காரியங்களிலும் தற்பெருமை கொள்ளாதபடிக்கு ஆவி அல்லது குணஇயல்புக்கு எதிரானவற்றின் பொருட்டே நாம் எச்சரிக்கிறோம். தற்பெருமை கொள்வதற்கு நம்மிடத்தில் ஒன்றும்இல்லை. ஏழ்மையிலுள்ள ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு உணவளிக்க

நமது உடைமைகள் அனைத்தையும் கொடுத்தாலும், சத்தியத்தை பிரஸ்தாபிக்க நம் நேரங்களைமுழுவதும் செலவிட்டாலும், கர்த்தரின் நாமத்தை கனப்படுத்துவதற்கு நம் ஆற்றல் முழுவதையும் கொடுத்தாலும், இவை எல்லாவற்றையும் செய்தபிறகு, நமது உணர்வு எப்படி இருக்கவேண்டுமெனில், நாம் கர்த்தருக்கு பிரயோஜனமாயிருக்கவில்லை என்பதே ஆகும். மாறாக, நாம் ஏற்கனவே அவரது கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களுக்காகவும், நாம் உண்மையுள்ளவர்களாயிருந்தால், அவர் வாக்குத்தத்தம் பண்ணின இன்னும் உள்ள அற்புதமான தேவதயவுகளையும் நமதாக்கிக் கொள்வோம் என்பதினாலும், நம் இருதயங்களில் கொண்டிருக்கும் சிறிய அளவிலான பக்தியைக் காண்பிக்க நாம் பெற்ற வாய்ப்பாக மாத்திரம் காணலாம். கவிஞன் நன்கு உணர்ந்து எழுதியிருந்தான்;

“உணர்வடைய விரும்புகிறேன்

முதல் அணுகுதலிலேயே – எனது கிரியை

பெருமையின் நிமித்தமா ? பேராவலின் நிமித்தமா ?”

**இன்னும் கூடுதலான அறிகுறிகள்**

ஆவிக்குரிய பெருமை என்ற இந்த நோய்க்கான மற்றுமொரு வடிவம், தொட்டதற்கெல்லாம் குற்றங்கண்டுபிடிக்கிற மனப்பான்மையில் வெளிப்படுத்தப்படும். ஒருவர் சாட்சியமளிக்கும் கூட்டத்திலோ, அல்லது வேதஆராய்ச்சி வகுப்பிலோ கலந்துகொள்ளும்போது, அங்கே ஒரு நிஜமான நல்ல சாட்சியத்தைக் கேட்க மனதிராமல், எந்தக்கேள்விக்கும் முறையான பதிலைக்கேட்க மனதின்றி, தன் சொந்த கருத்துக்களையே பெரிதுபடுத்துவாராகில், ஒரு ஆவிக்குரிய கூட்டத்தை நடத்த அறிந்த மூப்பரை ஒருபோதும் கண்ணோக்கிப் பாராமல் இருப்பாராகில், இதுபோன்றவைகள், ஆவிக்குரிய பெருமைக்கான அபாயகரமான அறிகுறிகளாக எடுத்துக்கொள்ளலாம்.

இவைகளனைத்தும் நடக்க வாய்ப்பில்லை என்றில்லாமல், அவைகள் அடிக்கடி நிகழ்ந்துகொண்டேஇருக்காது என்று நம்மால் நிச்சயமாக கூறமுடியும். வேத ஆதாரமற்ற செயல்பாடுகள் அல்லது நிதானிப்பில் குறைபாடு போன்றவை, ஊழியத்தின் வல்லமையைக் குறைத்து, தடையை உண்டாக்கும் என்பதை உடனடியாக கண்டறியும் திறனை அடையச்செய்வதோடு, அப்படிப்பட்டவைகளுக்கு கவனம் கொடுப்பதும், சரியாக அறிவிப்பதும் நமக்கு முற்றிலும் முறையானதாக இருக்கும். சபைக்கான நலன்களை சிறப்பாக செய்யவில்லை என்று எப்போதாகிலும் காண்போமானால், சிறிதுநேரம் பொறுமையோடு காத்திருந்தபிறகு, அவைகள் திருத்தப்படப் போவதில்லை என்று அறிந்தபிறகு, சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியில் அந்தத் தவறை சபையின் முன்பாகவோ அல்லது மூப்பரது கவனத்துக்கோ கொண்டுவருவது நமக்கு முறையானதாய் இருக்கும். அல்லது எவ்வழிமுறைப்படி எளிமையாக நிரூபிக்கமுடியுமோ எது மிகச்சிறந்த விளைவுகளை ஏற்படுத்துமோ அதை செய்வது முறையானதாக இருக்கும்.

“ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல்”, தேவ மகிமைக்கென்று எல்லாவற்றையும் செய்வோமாக.

நாம் இதில் கவனமாக இருக்கவேண்டிய அவசியமுள்ளது. இல்லாவிடில், நமது கருத்துக்களுக்கு இசைவாயிருக்கிற அனைத்தும் தேவனுடைய நாமத்துக்கு மகிமை சேர்க்கும் என்ற வழியில் நாம் நுழையும் அபாயம் நேரிடும். இதன்காரணமாக, நமது கருத்துக்களுக்கு இசைவாயிராத எவையும் அவரை பிரியப்படுத்தாது என்ற முடிவுக்கு செல்ல நேரிடும். அப்போஸ்தலர் பவுல் சரியாக எழுதுகிறார்; “ஆனபடியினாலே நீங்கள் ஞானமுள்ளவர்களைப் –போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து” (எபேசி**5:15**). “கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து” என்ற வார்த்தையின் பொருளை நாம் அறிந்திருப்பது அவசியமாகிறது. அதாவது இவ்வார்த்தை குறிப்பாக வலியுறுத்துகிற எண்ணங்கள், உள்நோக்கங்கள், உட்கருத்துக்கள் இவற்றை ஒவ்வொருபுறமும் நெருக்கமாக அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

**உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களக**

பரிசுத்த யாக்கோபு எழுதுகிறார்; “என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து,உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக” (யாக்**3:1**). நாம் குறிப்பிட்டிருந்ததுபோல கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும், விசேஷமாக, ஆவிக்குரிய பெருமையின் தாக்கத்தால் சுலபமாக விழும் அதேவேளையில், அவரது சத்தியத்தை எவ்வகையிலும் பகிரங்கமாய் பறைசாற்றுகின்ற எல்லாரையும், ஒரு விசேஷித்த அபாயம் சூழ்ந்திருப்பதாகத் தெரிகிறது.

தேவனுடைய கிருபையின் செய்தியை கேட்கும் செவியுள்ள யாவருக்கும் அறிவிப்பது, உண்மையாகவே ஒரு விசேஷித்த சிலாக்கியம். அவரோடு உடன்படிக்கை செய்த பிள்ளைகள் அனைவரும் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலை அடைந்து, அதன்மூலமாக நற்காரியங்களை சாந்தகுணமுடையோருக்கு சுவிசேஷமாய் பிரசங்கிக்கவும், இருதயம் நொறுங்குண்டோர்க்கு காயங்கட்டுதலை அளிக்கவும் கர்த்தர் அறிவித்திருப்பதற்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளோராக இருக்கவேண்டும்(ஏசா**61:1**). இந்த சிலாக்கியத்தை முன்பு பெயர் கிறிஸ்தவ குருமார்களுக்கு மட்டுமே உரிய சிலாக்கியம் என்று தவறாக எண்ணி செய்துவந்தனர். இந்த சிலாக்கியத்தால் நாம் அண்டை அயலார் மற்றும் நமது நண்பர்களுடனான தனிப்பட்ட சந்திப்பின்போது, சுவிசேஷத்தின் நற்காரியங்களை அறிவிப்பதில் களிகூறுகிறோம். தேவனுடைய ஸ்தானாதிபதிகளாகும் சிலாக்கியத்தைப்பெற்று, அவரது நாமத்தால் வரவிருக்கின்ற அவரது ராஜ்யத்தை அறிவிப்பதும், இயேசுவின் மரணத்தின் மூலமாக, தேவன் ஏற்கனவே உண்டு பண்ணியிருக்கிற மாபெரும் முன்னேற்பாட்டையும், அதனால் மகா மேன்மையான பலன்களையும், உலகத்திலிருந்து தற்போது

அழைக்கப்படுகிறவர்கள் எப்படி அந்த இராஜ்யத்தில் ராஜாக்களும் ஆசாரியர்களுமாக மாறுவார்கள், அவர்களது வருங்காலப் பணிக்கென்று ஆயத்தமாவதற்கு எப்படி சுபாவ மாறுதலை அடைகிறார்கள்.

செய்தி பழையதாய் இருந்தாலும், சரியாய் நிதானித்து போதிக்கும்போது மிகவும் புதியதும் அற்புதமாயும் இருந்து கேட்கும் செவியுடைய நேர்மையான இருதயம் உடையவர் பிரமிப்படைந்து விழித்தெழச்செய்கிறது. எப்படி சாதாரண மனிதனாக(அல்லது ஸ்திரீயாக) இருந்துகொண்டு,. இப்படிப்பட்ட அற்புதமான காரியங்களை புரிந்து கொள்ளவும், அழகாய் விவரித்துக் காண்பிக்கவும் முடிந்தது என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஒருவேளை அவர்களது வியப்பை மறைமுகமாக வெளிப்படுத்தவும் செய்வார்கள். அதன்பிறகு, ஆவிக்குரிய பெருமையாகிய நோய் பிடிக்கும் அபாயகரமான தருணம் வருகிறது. சிந்தையில் ஒரு சிறு ஊசலாட்டம் ஏற்படுகிறது அவ்வளவுதான். மனுக்குலத்தில் பெருந்திரளானவர்கள் புரிந்துகொள்ள முடியாதபடி தொலைதூரத்திலுள்ளவைகளை நீ அறிந்திருப்பது அதிசயமானது என்றும், வேதாகமத்தில் உள்ள இக்காரியங்களைக்குறித்து தேவவசனத்தில் நன்கு ஆற்றல் வாய்ந்தவர்களும், திறனுள்ள ஊழியர்களில் சிலர்கூட அறியாமையிலிருக்கிறார்கள் என்று நீ எண்ணுவாய்.

ஆவிக்குரிய பெருமை என்ற நோயை நீங்கள் பற்றிக்கொள்ளும்பொழுது உங்களை நேர்ப்படுத்திக்கொண்டவர்களாக உணர்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. உங்களை நீங்களே மதிப்புமிக்கவராக எண்ணுவீர்கள். அதிக கனத்துக்குரியவராகவும் கருதுவீர்கள். எல்லாவற்றிற்கும்மேலாக, நான் உயர்ந்தவர்களில் ஒருவன் என்று உணர்வீர்கள். உங்களுடைய குரலே இதை அறிகுறியாக வெளிப்படுத்தும், உங்களது குரலைக் கேட்கிறவர் இதை கவனித்துவிடுவார். பின்பு; இது கர்த்தர் அருளும் வார்த்தையல்ல, மாறாக நீங்களே உண்டாக்கினவைகள் என்றும், இதற்கு நீங்களே பொறுப்பாளிகள் என்றும், பேசின வார்த்தைகளிலிருந்து முன்பைவிட குறைந்த அளவே ஏற்கமுடியும் என்று உங்களை உற்று கவனிக்கிறவர் உணரத் துவங்குவார்.

கர்த்தருடைய பிள்ளைகள் பிறருக்கு சத்தியம் அறிவிக்கும் வாய்ப்புக்கள் வரும் சமயத்தில், தங்களை பெரிதுபடுத்தி உயர்த்திக்கொள்ளாமல், தங்களை மிகவும் தாழ்த்திக்கொள்வதே எல்லோரும் அங்கீகரிக்கும் முறையான மனப்பாங்காக இருக்கும். நமது தகுதியின்மையை நாமே உணரவேண்டும். தெய்வீகத் திட்டம் தயாரித்தது நாமல்ல, நாம் அதனை கேட்கிறவர்களாக மட்டுமே இருக்கிறோம், இது நிஜமாகவே தேவனுடைய திட்டம். பிறருக்கு வெளிக்கொணரும் அவரது ஊழியக்காரர்களாகவே நாம் கனப்படுத்தப்படுகிறோம் என்றும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கு மாறாக, ஞானத்தை நமது பங்காக மனதில் ஆழமாய்ப் பதியும் வண்ணம் நம் திறனைப்பயன்படுத்தி ஏதாகிலும் பேசி, தாக்கத்தை ஏற்படுத்தி, நமது பிரசங்க உரையில் அழகு வெளிப்பட்டதெனில், அந்தளவுக்கு கர்த்தருக்குரிய மகிமையை நாம் நமக்கென எடுத்துக்கொண்டோம் என்று அர்த்தமாகிறது. தற்காலத்திலும் வருங்காலத்திலும் கர்த்தரால் உபயோகிக்கப்படும் நமது தகுதியை வெளிப்படுத்தத் தவறியதால் நமக்கு நாமே காயத்தை ஏற்படுத்திக்கொள்கிறோம். கர்த்தருடைய ஸ்தானாபதிகளாக இருந்து செய்தியை அளிக்கும் அற்புதமான சிலாக்கியத்தையும், அவரது திட்டத்தையும் அவரது மேன்மையையும் அறிவிக்கும்போது, நம்மை அடக்கத்தோடும் தாழ்ச்சியோடும் நடக்கச்செய்யும். ஏனெனில் இது தேவன் நமக்கு அளித்த சிலாக்கியம். பலத்தில் மேம்பட்டிருக்கிற தம்மிடமுள்ள தேவதூதர்களைக்கொண்டு, அவரால் இந்த அற்புதமான செய்தியை பிறர் அறியும்படி கொடுத்திருக்கமுடியும்.

**மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர் மேலான விசேஷப்பரீட்சை**

பிரியமுள்ள சகோதரர்களடங்கிய சபையில் சபை மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்களும் உதவிக்காரர்களும் அவர்களுக்குரிய தாழ்மைக்கான பரீட்சையை இன்னும் பெற இருக்கிறார்கள். ஆவிக்குரிய பெருமை என்ற வியாதியின் மாபெரும் தொற்று நோய் ஏற்படும் அபாயமின்றி ஒருவரும் அப்படிப்பட்ட ஸ்தானத்தில் இருக்கமுடியாது. சில சமயங்களில் பரிசுத்த பவுல் கொடுத்த எச்சரிப்பை கர்த்தருடைய பிள்ளைகள் முற்றிலுமாக மறந்துவிடுவதாக தோன்றுகிறது. அதாவது, புதிதாக சபையில் வந்துசேர்ந்திருக்கிறவரை, அதாவது அனுபவமற்றவரை, சத்தியத்தில் இளைஞராக இருக்கின்ற அவரை, அவர் எவ்வளவு பிரகாசிப்பவராய் இருந்தாலும், எவ்வளவு படித்திருந்தாலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், அவரை மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ ஊழியத்துக்கு தெரிவு செய்யக்கூடாது. ஏனெனில் அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோல, தேவபிள்ளைகள் ஆவிக்குரிய மேட்டிமை என்ற இந்த பகையாளியின் கையில் அவர் விசேஷித்தவிதமாக அகப்பட நேரிடும் – 1தீமோத் 3:6.

சபையில் புதிதாக வந்துசேர்ந்தவர்கள் மட்டுமே அபாயத்திலிருக்கிறார்கள் என்று நாம் கருதமுடியாது. கர்த்தருடைய பிள்ளைகளாக ஊழியம் செய்யும்படி நியமிக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும், மாபெரும் சோதனையின் களத்திற்குள் போடப்படுவர். ஆவிக்குரிய விழுகை அல்லது இரண்டாம் மரணமாகிய அழிவை இது பொருள்படுத்தக்கூடும். கர்த்தருடைய பிள்ளைகள் தாங்கள் தெரிவுசெய்த தங்களுடைய ஊழியக்காரர்களைக் குறித்து, ஒருவேளை இக்காரியங்களில் போதுமான அளவு ஆலோசிக்காதிருக்கலாம். ஒருவேளை, சகோதரர்களுடைய வாக்கைப்பெற்று இந்த ஊழிய ஸ்தானங்களை ஏற்றுக்கொண்டவர்கள், இவ்வூழியத்தில் என்ன அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்பதை அரிதாகவே உணர்ந்திருப்பார்கள். அவர்கள் உணர்ந்திருந்தார்களானால், அந்த புரிந்துணர்வு அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காண்பிக்கச்செய்யும். மேலும்

தாழ்மை அவர்களை நிச்சயமாக வழிநடத்தி, அவர்கள் ஊழியத்துக்கு வெளிப்படையாக நியமிக்கப்பட்டதை தெளிவாகக் கண்டாலொழிய, தானாக முன்வந்து ஊழியம்செய்ய முயற்சிக்கக்கூடாது.

ஆனால் நாம் கண்டறிவது என்ன ? அந்தோ ! மூப்பர் அல்லது உதவிக்காரர் ஸ்தானத்தை விரும்பித்தேடும் மனப்பாங்கு ஒருசிலரிடத்தில் நிலவுகிறது. சிலரோ, தாங்கள் தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்று போட்டிபோடவும், பேரம் பேசும் மனப்பான்மையையும் பெற்றிருக்கின்றனர். வேறுசிலரோ, அப்படிப்பட்ட தேர்தலில் தங்களுக்கெதிராக யாரேனும் வாக்களித்திருந்தால் கோபத்தை வெளிப்படுத்தும் மனப்பாங்கை பெற்றுள்ளனர். அந்தோ ! அன்பு சகோதரர்களது சிந்தைகளில் நீண்டகாலமாக வேதனையளித்து வருகிறவைகளை உணர்ந்திருந்து, இக்காரியங்களில் அவர்களை வற்புறுத்துவார்களானால், எப்பேர்ப்பட்ட வித்தியாசமான வழிமுறையை அவர்கள் எடுக்கவேண்டும் ! அப்படிப்பட்ட பொறுப்புணர்வு வைக்கப்பட்டிருக்கிற அந்த ஸ்தானத்திற்கு உயர்த்தப்படும்போது, எல்லா சாந்தம் மற்றும் மனத்தாழ்மையோடும் அவர்கள் அச்சத்தோடு நடக்க வேண்டும். சபை அனைவரும் தாங்கள் பெற்றுள்ள சத்திய அறிவின்படி போதகர்களாகும் தகுதியைப் பெற்றிருந்தபோதிலும், அவர்களுக்கு விசேஷித்ததும், கடுமையானதுமான பரீட்சை வைக்கப்பட்டிருப்பதால், போதகராகாதிருப்பதே பாதுகாப்பானது. கர்த்தரிடத்திலும் சகோதரர்களிடத்திலுமான பொறுப்புணர்வு மட்டுமே ஒருவரை மனப்பூர்வமாகவும், முழு திறனோடும் ஊழியம்செய்யும்படி தூண்டவேண்டும். சபையில் கர்த்தருடைய பிரதிநிதிகளாக எல்லோரும் கட்டாயம் நேசிக்கப்படவேண்டும்.

பெருமையின் சுபாவம் எல்லாவற்றிலும் மேலோங்கி, மூப்பர்களாகும்படி அல்லது மேன்மையானவர்களாவதற்கு பெரும் விருப்பங் கொள்வது, அந்த நபருக்கு மட்டும் அபாயத்தை வருவிப்பதோடு நில்லாமல், அவர் சார்ந்திருக்கிற முழுசபைக்கும் அபாயத்தை வருவிக்கும். ஒவ்வொரு நோய் போன்றே பெருமையின் ஆவியும் தொற்றிக்கொள்ளும் தன்மையுடையது. சண்டை, வீண்பெருமை, ஆசை இவையனைத்தும் கர்த்தருடைய ஆவிக்கு எதிரானது, இவை விரைவில் வெளிப்படும். அதைதொடர்ந்து வருவது, கோபம், வஞ்சனை, பொறாமை, வெறுப்பு, தீயனபேசுதல், தீய சிந்தனை ஆகியவை. இவைகள் மாம்சத்துக்கும் சாத்தானுக்குமடுத்த கிரியைகள் என்று பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். இவையனைத்தும் ஊறு ஏற்படுத்துபவை. இந்த ஆவி அனைத்தும் விரோதியினுடையது. ஒன்று அல்லது இரண்டு மூப்பர்களாலோ, தலைவர்களாலோ அல்லது மூப்பர்களாகும்படி விரும்புகின்ற அல்லது தலைவர்களாகும்படி விரும்புகின்ற ஒன்று அல்லது மேற்பட்ட நபர்கள் மூலமாகவோ இவைகள் பொருத்தமாக சபைக்குள் நுழைக்கப்படும்.

இது உண்மையே என்று கூறுவதில் நாம் வருத்தமடைகிறோம். ஆயினும் தேவனால் நேசிக்கப்படுகின்ற அநேக பிள்ளைகளை உள்ளடக்கிய சில சபைகளில், அநேகர் மாதிரிகையாகப் பின்பற்றத்தக்கவர்களாக இருக்கின்ற அதேவேளையில், இந்த விரோதியின் ஆவிக்குள் நுழைந்தவர்களும் இருக்கிறார்கள். கர்த்தரின் ஆவி சபையை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு பதிலாக, இந்த தீயஆவி அல்லது தீயகுணம் பல்வேறு வழிகளில் சபை கூடுகைகளில் வெளியரங்கமாகிறது. எண்ணிக்கையிலும் ஆவிக்குரிய வகையிலும் சபை வளர்ச்சியடைவதில் தோல்வியுறுகிறது. ஆவிக்குரிய பெருமை என்ற வகையில் அறியப்படுகிற நச்சுத்தன்மை வாய்ந்த கசப்பான கனிகள் இவைகளே.

அப்படிப்பட்ட பெருமையுள்ளோர் முன்பாக, காவல்கோபுர வாசகர்களது மொழியின் வல்லமையை பெற்றிருந்து, அதை உயர்த்திக் காண்பித்திருந்தோமானால், அவர்கள் அதன் உண்மை உருவத்தையும் பயங்கரமான வண்ணத்தையும் கண்டிருப்பர். அதன்விளைவாக, எச்சரிப்பின் மணியோசை சீயோனில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். காவல்கோபுரத்திலிருந்து விழிப்புணர்வின் மணியோசையை மகிழ்ச்சியுடன் எழுப்புகின்ற இந்த பிரியமானவர்கள், தங்களை இவ்வாறு ஈடுபடுத்திக்கொண்டு மேன்மையான குணாதிசயங்களை அடிக்கடி வெளிப்படுத்தி, உண்மையாகவே ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய புத்திரராகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது. இவர்களுள் சிலர், பந்தயசாலையில் தங்கள் ஓட்டத்தை கடந்த காலங்களில் அற்புதமாக ஓடினர் என்பதை நாம் அறிவோம். இவர்களுடைய குணாதிசயங்கள் தவறான வழியில் திசை திரும்பியிருக்கிறதன் அடையாளங்களைக் கண்டு நாம் பரிதாபப்பட்டு, அவர்களுக்காக வருந்துகிறோம். ''அவர்களுடைய கனிகளினாலே அவர்களை நீங்கள் அறிவீர்கள்'' என்று கூறின கர்த்தரது வார்த்தைகளுக்கு செவிமடுப்போம் – மத் 7:16.

## ஆவிக்குரிய பெருமைக்கு எதிராக பாதுகாத்துக் கொள்ளுதல்

ஏற்கனவே சுட்டிக் காண்பித்தபடி, ஆழமாக வேரூன்றியிருக்கிற இந்த நோயாகிய ஆவிக்குரிய பெருமையோடு தொடர்புடைய ஒரு அபாயகரமான காரியம் என்னவென்றால், இந்நோயை உடையவர்கள் இதைக்குறித்த விழிப்புணர்வை பெற்றிருக்கமாட்டார்கள் என்பதேயாகும். மற்றுமொரு கடினம் என்னவென்றால், அவர்கள் இந்நோயை அடைந்திருக்கிறார்கள் என்று அவர்களிடத்தில் அறிவித்து அவர்களை எச்சரிப்பதும், அவர்களை திருத்துவதும் பெரும்பாலும் கூடாத காரியமாகும். இப்பாடத்தைக்குறித்து அவர்களிடம் பேசினோமானால், அவர்களுடைய எதிரி அவர்களுக்கு உதவி செய்தவர்களே என்று எண்ணுவதாக தோற்றமளிக்கும். இதன் காரணமாக, அவர்கள்மேல் அவர் பொறாமைகொண்டிருப்பதாகவும், அவர்களுடைய ஸ்தானத்தை தான் எடுக்கவிரும்புவதாகவும் கூறுவார். இதனிமித்தமாக, இந்நோய் பெரும்பாலும் குணமளிக்கமுடியாததாகவே இருந்து, ஒருவேளை கர்த்தருடைய வழிகாட்டுதலின் குறுக்கீடோ அல்லது சபை சகோதரர்களது குறுக்கீடோ அவருக்கு உதவக்கூடும்.

அப்படிப்பட்டதொரு குணஇயல்பு வளர்ச்சியடைவதை சபை இனங்காணும்போது, அன்பிலும் நல்நோக்கத்திலும் உடனடியாக செயல்பட்டு, ஆவிக்குரிய பெருமையின் பாரம் சபையிலுள்ள ஒரு தனிநபரிடம் இருக்குமானால் அந்நபரை சபையின் எந்த ஊழியத்துக்கும் தெரிவுசெய்யாமல் தோல்வியடையச் செய்ய வேண்டும். அவர்கள் சீற்றமடைவார்களானால், அந்த சுயஉணர்வுடைய ஒருவரின் கோபம் தணிந்து அமைதலாகும்படியும், தன் பாரத்தை அடையும்படியும் அவரது சொந்த நன்மையின்பொருட்டும் சபையின் நன்மைக்காகவும் இதை செய்யவேண்டியது அத்தியாவசியமாக எண்ணப்பட வேண்டும். சபையானது இவ்விஷயத்தில் உதவிசெய்யத் தவறும் பட்சத்தில், அந்த நபரின் நன்மைக்காக, சிட்சிப்பதைத் தவிர கர்த்தருக்கு வேறு வழி இல்லை. வியாபாரம் தோல்வியில் முடிதல், அல்லது வியாபாரத்தில் திருப்பங்கள் அல்லது சரீரநோய் அல்லது அவருக்கு எந்த வழி சிறந்ததாக காணப்படுகிறதோ அதன்படி சிட்சை அனுமதிக்கப்படும். கர்த்தருடைய உண்மையுள்ள பிள்ளை ஒவ்வொருவரும், அப்படிப்பட்ட நிலைமைக்கு செல்லும்பொழுது, அப்படிப்பட்ட நீதியில் சீர்திருத்துதல் அவசியம் என்று அறிந்தே, கர்த்தர் செய்வார் என்ற நம்பிக்கையை நாம் அடைந்துள்ளோம். ‘‘கர்த்தர் தம் ஜனங்களை நியாயந்தீர்ப்பார்(தண்டனை)’’ என்று எழுதியிருக்கிறது–உபாகமம்32:36.

**இப்பாவத்தைக் குறித்த வேதாகம உதாரணம்**

வேதாகமம் இந்தப் பாவத்தைக்குறித்து அநேக உதாரணங்களைக் கொடுத்துள்ளது. ஆனால் நாம் எளிதில் கவனத்தை ஈர்க்கின்ற ஒன்றை தெரிவு செய்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்த ஒரு பரிசுத்த மனுஷன், கர்த்தரால் நேசிக்கப்பட்ட, நேரிய குணமுடைய , சுயத்தை பலிசெலுத்தின, கர்த்தருடைய தீர்க்கதரிசி இருந்தார். அவர் கர்த்தருக்கும் அவரது ஜனங்களுக்கும் உண்மையாகவும் அற்புதமாகவும் 40 வருடங்கள் ஊழியம்செய்தார். ஆனால் முடிவில் இந்த ஆவிக்குரிய பெருமையாகிய சுய தீர்மானமான பாவம்செய்து குற்றவாளியானார். இவை எல்லாவற்றிலும் விநோதமாக, இம்மனிதன் தன் துவக்கக் காலத்தில்; ‘‘பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான்’’ என்று வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது– எண்12:3.

ஆம்! மோசேயே அந்த மகிமை நிறைந்த நபர். கர்த்தருடைய ஊழியனாக தன் அனுபவத்தைத் துவக்கினபோது, அவர் மிகவும் சாந்த குணமுள்ளவரும், மிகுந்த மனத்தாழ்மையுடையவருமாய் இருந்தார். ஆனால் அவரது ஊழியம் நிறைவடைகின்ற வேளையில், அங்கே அவர் கர்த்தருக்கு மகிமையை கொடுத்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, ஆவிக்குரிய மேட்டிமையால் அல்லது சுயதீர்மானத்தால் செய்த காரியத்திற்கு தண்டனையாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையாதபடிக்கு தடைஏற்பட்டது. அப்பொழுது அங்கே நிலவிய சூழ்நிலைகளை நாம் நினைவுகூர்வோம்.

கர்த்தருடைய விசேஷித்த ஊழியனாயிருந்த மோசே தலைமையேற்று எகிப்தை விட்டு இஸ்ரயேலை வெளியே அழைத்துவந்து, செங்கடலைக் கடந்து கானானுக்குப் போகும்வழியில் வனாந்திரத்திற்குள் பிரவேசித்தார்கள். வனாந்தரத்தில் பிரயாணம் செல்லும்போது,கர்த்தரின் வழிகாட்டுதலின்பேரில் மோசே அநேக அற்புதங்களைச் செய்தார். அவற்றுள் ஒன்று, ஜனங்கள் தண்ணீரில்லாமல் பெரும் தாகம் அடைந்தபொழுது, பாறையை கோலினால் அடித்து தண்ணீர் வரப் பண்ணினது. பாறையை அடிக்கும்படி தேவன் அவரை அறிவுறுத்தினார். ஜனங்கள் புத்துணர்ச்சி அடையும்படிக்கு அந்தப் பாறையிலிருந்து நீர்ஓடை அபரிதமாக பாய்ந்தோடியது.

வேதாகமத்தின்படி அந்தப்பாறை ‘‘யுகங்களுக்கடுத்த கன்மலையாகிய’’ கிறிஸ்துவை சித்தரிக்கிறது. கர்த்தருடைய ஏற்பாட்டின்படி இந்த ‘‘யுகங்களுக்கடுத்த கன்மலை’’அடிக்கப்பட்டது. அதாவது இயேசுவிடமிருந்து ஆதாமின் சந்ததியார் எல்லோருக்கும் ஜீவத்தண்ணீர் வழிந்தோடியது. இவர்கள் இஸ்ரயேலர்களாக மாறி, உண்மையாகவே இவ்வுலகமாகிய எகிப்திலிருந்து வெளியே வரும்படி, அதாவது பாவத்திலிருந்து வெளியேவந்து, விரோதியின் ராஜ்யத்திலிருந்து வெளியேவந்து, கீழ்ப்படிதலையும் கர்த்தரிடத்தில் ஐக்கியத்தையும் பெற்றுக்கொள்வார்கள்.

கன்மலையை அடித்தபிறகு 40 வருடங்கள் கடந்தநிலையில், இஸ்ரலேர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்தனர். கானானுக்குள் அனுமதிக்கப்படும் நேரம் வரும்வரை காத்திருந்தனர். தண்ணீரற்றதும் வறண்டதுமாகிய இந்தப் பாலைவன எல்லைக்குள் மீண்டும் அலைந்து திரியும்படி வழிநடத்தப்பட்டனர். ஜனங்கள் மோசேயிடம் கதறினபோது, என்னசெய்வது என அவர்கள் நிமித்தமாக கர்த்தரிடம் முறையிட்டார். அப்பொழுது முந்தின விசை கன்மலையை அடித்து தண்ணீர்வந்த அதே கன்மலையினருகில் சென்று, பேசு அப்பொழுது தண்ணீர்வரும் என்று பதிலளித்தார். ஆனால் மோசே கடந்த 40வருடங்களாக இஸ்ரயேலரோடு தொடர்புகொண்டு, தகப்பன் தன் பிள்ளைகளோடு உறவாடுவதுபோல் உறவாடியிருந்து, இயல்பாகவே சுய நிச்சயத்தன்மையை பெருமளவு பெற்றிருந்தார். அப்படிப்பட்ட அனுபவங்களை கடினமாக கடந்துவந்திருந்தாலும், இன்னும் அவர் உலகெங்குமுள்ளோரில் சாந்தகுணமுடையவராகவே இருந்தார்.

இந்நிலையில் தற்போது கர்த்தருடைய கட்டளையை அலட்சியப்படுத்தி, கன்மலையின் அருகில்சென்று, தன் கையிலிருந்த கோலினால் இரண்டாம்முறை கன்மலையை அடித்து, ஜனங்களைப்பார்த்து ஆக்ரோஷமாக சத்தமிட்டார். ‘‘கலகக்காரரே கேளுங்கள்; உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ ?’’ (எண்20:1–12). கர்த்தருக்கு எல்லா மகிமையையும் செலுத்துவதற்கு பதிலாக, தனக்குத்தானே மகிமையை வருவித்துக்கொண்டார், அந்தோ பரிதாபமான மோசே! தான் மாபெரும் தவறு செய்துவிட்டேன் என்று விரைவில் மோசே உணர்ந்துகொண்டார். அவர் செய்த ஒரே தவறு என்று இதனை சொல்லப்படுகிறது. ஆயினும் செய்த இத்தவறினிமித்தமாக கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை கர்த்தர் அவருக்கு கொடுக்கவில்லை,

மாறாக, யோர்தான் நதியின் குறுக்கேயிருந்து அத்தேசத்தை காணும் வாய்ப்பை மட்டுமே தந்தார். அங்கேயே அவரது உடலை அடக்கம் பண்ணவும் கர்த்தர் அனுமதித்தார்.

கர்த்தருடைய பார்வையில் ஆவிக்குரிய மேட்டிமையும், சுய நிச்சயத்தன்மையும் மிகவும் அருவருக்கத்தக்கவைகளாய் இருக்கின்றதை இந்த உதாரணத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளாதிருக்கலாமா ? நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்படடிருக்கிற இந்த மாபெரும் பாடத்தைவிட வேறு ஏதேனும் முடிவுரையை நாம் கொண்டுவரமுடியுமா ?

**ஆறுதலின் வார்த்தை**

மோசேயைக்காட்டிலும் கூடுதலாகவும் , மிக மோசமாகவும் தவறுகள் செய்திருக்கிறேன் என்றோ அல்லது கர்த்தரை கனப்படுத்த கவனமற்று, அதிக பிடிவாதத்தால் இருந்திருக்கிறேன் என்றும், இவ்வாறு ஆவிக்குரிய மேட்டிமையை அதிகளவுக்கு வெளிப்படுத்தியிருப்பவர்கள் வருந்தும்பொழுது, அவர்களைத் தேற்றும் வண்ணமாக, அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை கடுமையாக இருக்கும் என்பதை நாம் கவனிப்போமாக. ஏனெனில் இதுவும் ஒரு பகுதியாக நிழலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்மலையை முதலாவதாக அடித்தது, நம் கர்த்தர் சிலுவையிலறையப் – படுதலை அடையாளமாக குறிப்பிடுகிறதென்றால், இரண்டாம் முறை கன்மலையை அடித்தலானது தேவகுமாரனை மறுபடியும் சிலுவையிலறைந்து வெளியரங்கமாக அவமானப்– படுத்துவதை குறிக்கிறது என்று எபிரேயர் 6:6இல் பரிசுத்த பவுல் விளக்குகின்றார். கன்மலையை அடித்தல் வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும் இயேசுவையும் அவரது போதனையையும், அவர் நிமித்தமாகவும் மறுதலிப்பதற்கு அடையாளமாய் இருக்கிறதென்றால், மோசே யோர்தானைக் கடந்து கானானுக்குள் பிரவேசித்தலைத் தடுத்தது இரண்டாம் மரணத்துக்கு அடையாளமாக இருக்கிறது. மோசே ஒருபோதும் கானானுக்குள் இனி பிரவேசிக்கமாட்டார் என்று நாம் எண்ணவோ, அல்லது அவர் இரண்டாம் மரணத்தில் மரித்துவிட்டார் என்று எண்ணவோ கூடாது, மாறாக, அவரது அனுபவங்களில் இந்த அடையாளம் காண்பிக்கப்பட்டுள்ளதை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும்.

அல்லது, சகோதரர்கள் கர்த்தரது நாமத்தினாலோ அல்லது சபையின்பேரிலோ செய்வதைக் காட்டிலும், தனது சொந்த நாமத்திற்காக காரியங்களை செய்வார்களானால், மரணத்துக்கேதுவான பாவம் செய்ததாக நாம் சிந்திக்கக்கூடாது. ஆயினும், ஆவிக்குரிய பெருமைக்கு விரோதமாக பயங்கர அபாயம் கூடவே செல்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலையிலேயே தொடர்ந்து அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தார்களானால், நிச்சயமாக இரண்டாம் மரணமே முடிவாக இருக்கும். இந்த உண்மையைப் புரிந்துகொண்டபிறகு, நாம் எந்தளவு பயத்தோடும், வைராக்கியத்தோடும் இருக்கவேண்டும், நம்முள் காணப்படுகிற அதன் ஒவ்வொரு அறிகுறியையும் களைந்தெறியவேண்டும், அதோடுகூட கவனமாயிருக்கவும் வேண்டும். அப்படி இல்லாவிடில், இது தொற்றுநோயாக நம்முள் ஊடுருவியோ, அல்லது ஏதாவதுவகையில் அதன் ஆதிக்கத்தின்கீழோ வருவதுடன், அந்த நோயின் அறிகுறிகளைப் பெற்றிருப்போம்.

**ஆவிக்குரிய பெருமையை தடுத்தலும், குணப்படுத்துதலும்**

இந்நோய் நம்மைக் கட்டுப்படுத்துவதை உணர்ந்தோமானால், இதற்கான சிகிச்சை பெறுவது தொடர்பாக கடினம் இருக்கிறது என்பதை நாம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். கடினத்தின் பிரதான அம்சம் என்னவென்றால், இந்நோய் மனசாட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தி, அழிக்கும். ராஜரீகப் பிரமாணத்தின் எளிமையான கொள்கைகளுக்கு நம் சிந்தை ஏறத்தாழ மந்தநிலையை அடையும் – இன்னும் மேலான பிரமாணமாகிய சகோதரர்க்கான நம் கர்த்தரின் புதிய உடன்படிக்கையை குறிப்பிடவில்லை. ராஜரீகப் பிரமாணத்தை அலட்சியப்படுத்தும் ஒவ்வொருமுறையும், சபையின் ஊழியக்காரர் தேர்விலோ அல்லது அதன் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதலிலோ அது சபையை பலவந்தமாக கீழ்ப்படியச்செய்யும் முயற்சியாக வெளியரங்கமாகும்.

கர்த்தருடைய வார்த்தையின் விதிமுறைகள் அறியப்பட்டிருக்கின்றன. சபையில் அதிகாரம் தங்கியிருத்தல் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது, ஒரு மூப்பர் இதை மாற்றவோ திருப்பவோ வளைக்கவோ முயற்சிக்கும்பொழுது, இதை அவர் பிறருக்காக செய்யாமல், அவருக்காகவே செய்யப்பட்டதாகிறது. ஒரு சபையின் அங்கமாக எந்தக் காரியமானாலும் கர்த்தருடைய சித்தத்தின்படி அவருக்கு சொந்த அபிப்பிராயம் உண்டு. தன் நியாயத்தை வெளிப்படுத்தும் உரிமையை அவர் பெற்றிருக்கிறார். ஆனால் சபை ஜனங்களது நிதானிப்பின் வெளிப்பாட்டை கூறவிடாமல் தடுக்கும் அதிகாரம் மூப்பருக்குக் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு குறுக்கிடும் ஒவ்வொரு முறையும் அவர் ராஜரீகப் பிரமாணத்தை மீறுகிறார். அதுமட்டுமல்லாமல், அன்பின் பிரமாணத்தை மீறுகிறார், மேலும் தேவனை கனப்படுத்துவாயாக என்ற முதலாம் கட்டளையையும் மீறுகிறார். அப்படிப்பட்ட காரியங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீக ஒழுங்குமுறையை ஒதுக்கி வைப்பதை இத்தகைய செயல்பாடுகள் காண்பிக்கிறது.

ஆனால் ஒரு மூப்பர் ராஜரீகப் பிரமாணத்தின் கொள்கைகளை எதிர்த்து அப்படிப்பட்ட வழிகளில் வளர்ந்துவரும்போது, நாசூக்காய் தன்வசப்படுத்தவோ, பலவந்தமாய் அடக்கி தன்சித்தப்படி கனமடைய நடத்திச் சென்று, ராஜரீக விதியின் கொள்கையின்படி எதிர்த்து நிற்கும்போது, அவர் தன் சொந்த சிந்தையை தடம்புரளச்செய்கிறதே இதன் விளைவாய் இருக்கும். அவருடைய மனசாட்சியின் அறிவு மந்தமடைந்தது. தான் தெளிவாய்க் காண்கிற நீதியின் கொள்கைகளை அலட்சியப்படுத்தி, தவறுசெய்து, யாரெல்லாம் தங்கள் மனசாட்சியை தொடர்ச்சியாக மீறுகிறார்களோ அவர்கள் தங்கள் மனசாட்சியை பலவீனப்படுத்துகிறார்கள்.

நம் நிதானிப்புக்கென்று முன்வைக்கப்படுகிற பல்வேறு காரியங்களை நாம் எடைபோட்டு அளவிடும்

அளவுகோலாக மனசாட்சி இருக்கிறது. ஒரு காரியத்தினை சரி அல்லது தவறு, நீதி அல்லது அநீதி, சத்தியம் அல்லது பொய் என்று நிச்சயப்படுத்தும் நிதானிப்பை நமக்குத்தருவது மனசாட்சியாகும். இந்த அளவுகோல் மிகவும் முரடானதாகவோ அல்லது மிக மிருதுவானதாகவோ இருக்கலாம். இது(மனசாட்சி) மிகத் துல்லியமாக வகையறுக்கத்தக்க திறனைப் பெற்றிருக்கக்கூடும். அல்லது காரியங்களை கீழ்த்தரமாகவோ அநாகரீகமான வழியிலோ காணக்கூடும். ஒரு கிறிஸ்தவன் விசேஷமாக கிறிஸ்துவின் பள்ளியில் நீண்டகாலமாக கற்று வருபவனாயிருந்தால், அவன் மிகவும் உணர்வுமிக்க மனசாட்சியை உடையவனாயிருக்கவேண்டும். வாழ்க்கையின் நடவடிக்கைகளில் எழும் அனைத்துக் கேள்விகளுக்கும் தேவனுடைய வசனத்திலிருந்து சரிவர நிதானித்து அதன் பல்வேறு அம்சங்களை முழுமையாக கிரகித்து, சமநிலையுடையவராக அவர்களது நியாயத்தையும் தவறையும் துல்லியமாக தீர்மானிக்கவும் திறன் பெற்றிருக்கவேண்டும். இதன்மூலம் கர்த்தருக்கு பிரியமானவராகவோ, அல்லது வெறுக்கத்தக்கவராகவோ அவர்கள் விளங்குவர். அந்த அளவுகோல் பழுதுபட்டிருக்குமானால், பெரும் அபாயம் ஒவ்வொரு பாவத்திலும் வெளிப்படுவதோடு, விசேஷித்தவிதமாக ஆவிக்குரிய பெருமை என்னும் பாவத்திலும் நடத்திச்செல்லும் என்று நமக்குத்தோன்றுகிறது. அந்த அளவுகோலை சரி செய்வதைத்தவிர இதற்கு வேறு தீர்வு இல்லை.

வியாபாரத்திலோ அல்லது ஒரு விவாதத்திலோ அல்லது ஒரு சபை உத்தியோகஸ்தர் தேர்தலிலோ ஒரு சகோதரனது சூழ்நிலையையோ அல்லது மற்ற எவருடைய சூழ்நிலையையோ தனக்கு சாதகமாக்கிக்கொள்ள விரும்பாதிருந்து, கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் மனசாட்சியை முழுவதும் நீதிக்குட்படுத்தி ஜாக்கிரதை உணர்வோடு இருத்தல் எத்தனை அவசியமாயுள்ளது! தன் சொந்த விஷயத்தில் நீதியின் சட்டங்களை சிறிதளவு மீறும் எண்ணம் எழும்போது, அது தேவனுடைய உண்மை பிள்ளை ஒவ்வொருவரது தலையிலும் இருதயத்திலும் உரத்த மணியோசை ஒலித்து விழிப்பூட்டவேண்டும். நீதியின் உயர்ந்த கொள்கைக்கு என்னையே உட்படுத்தியிருக்கிற நான், அநீதியோடு இணங்குபவனாக காணப்படுகிறேனா ? என் சொந்த நடக்கையில் ஏதாகிலும் அநீதியின் சுபாவம் காணப்படும்போது, என் கண்களை மூடிக் கொள்கிறேனா ? நான் என் சொந்த மனசாட்சிக்கு களங்கம் ஏற்படுத்தி, தரம்இழக்கச் செய்தபிறகு, அதனால் ஏற்படும் பயங்கர விளைவுகளுக்கு நானே பொறுப்பாளி என்று ஏற்றுக்கொள்கிறேனா ?

ஒரு தவறான வழிமுறையை சரிப்படுத்துவது என்பதன்பொருள், நித்தியஜீவன் அல்லது நித்தியமரணம் என்ற முடிவு இதில் தீர்மானிக்கப்பட இருப்பதால், நீதியின் கொள்கைகளை கவனமாக இருதயத்திலும் சிந்தையிலும் மீண்டும் ஏற்படுத்தவேண்டும். நமது சிந்தைகளில் நீதி மீண்டும் ஏற்படுத்தப்பட்டு, துவங்கப்படுவதால், இது நம் வார்த்தைகளையும் செயல்களையும் முறைப்படி கட்டுப்படுத்தத் துவங்கும். அதன்பின்பு, தவறுசெய்தவர், தான் எந்த அளவு நீதியின் கொள்கைக்கு எதிராக கீழ்த்தரமாக செயல்பட்டிருக்கிறேன் என்றும், ஆவிக்குரிய பெருமை ராஜ்யத்தின் வருங்கால மேன்மைகளை ஏறத்தாழ முழுவதும் அழித்திருப்பதையும், படிப்படியாக அவர் உணரத்துவங்குவார். அப்படிப்பட்ட ஒருவர், நிச்சயமாக இருதயத்தில் மனம் வருந்தி, வருங்காலத்துக்கென சரியான தீர்மானங்களை எடுப்பார்.

**சுயபரிசோதனை செய்வதன் பெரிதான அவசியம்**

ஆவிக்குரிய பெருமையின் நயவஞ்சகமான குணத்தையும், தீமையின் செல்வாக்கையும் அறிந்திருக்கிற நாம், இதற்கெதிராக எப்படி நம்மை தற்காத்துக்கொள்வது ? தேவ அன்புக்குள் நம்மைக் காத்துவருகிறோம் என்றும், ஆவிக்குரிய பெருமையை நோக்கிச்செல்லாமல், அதினின்று வழிவிலகி நடக்கிறோம் என்றும் எப்படி நாம் அறிந்துகொள்வது ?

நாம் ஏற்கனவே ஆலோசனையாக காவற்கோபுர பத்திரிக்கையில் கொடுத்துள்ளபடி, கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருநாள் துவங்கும்பொழுதும், அவரிடத்தில் சென்று, தெய்வீக ஞானத்தையும் மேற்பார்வையையும் கேட்பதோடு மட்டுமல்ல, அந்நாள் முழுவதும் ஜெபித்த ஜெபத்திற்கேற்றவாறு நடப்பதற்கு முயற்சிக்கவேண்டும். அதோடுகூட, அந்நாளின் முடிவில் , நாம் கர்த்தரிடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையின் பொருத்தனைகளுக்கேற்ப, நாம் கட்டாயம் செய்திருக்க வேண்டிய காரியங்களை அலட்சியப்படுத்தினது, மேலும், நாம் செய்திருக்ககூடாத காரியங்களைச் செய்தது, போன்ற நாம் செய்தவற்றை விசேஷமாக சுயபரிசோதனை செய்யும்படி நாம் பரிந்துரைக்கப்படுகிறோம். இவ்வாறு கர்த்தரோடு ஒவ்வொரு இரவிலும் மதிப்பீடுசெய்து, சமநிலையை அடைவது தொடருமானால், மேலும், இவை நேர்மையாக செய்யப்படுமேயானால், நம் மனசாட்சி புரட்டப்படாதிருந்து, உண்மையாய் சமநிலையை காத்துக்கொண்டால், அப்படிப்பட்டோர் கர்த்தரது வசனத்துக்கு இசைவாக இருக்கிறார்கள் என்றும், தேவஅன்பில் தங்களைக் காத்துக்கொள்கின்றனர் என்றும் உறுதியாக நிச்சயிக்கலாம். அவர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ச்சியடைவார்கள், “பொல்லாங்கன் அவர்களைத் தொடான்”.

பிறருடைய வார்த்தைகளையும் செயல்களையும் இதமாக கண்ணோக்கும்போது, அவர்களது நல்ல நோக்கங்களை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொள்ளும் அதேவேளையில், நமது சொந்த இருதயத்தையும், நம் உள்நோக்கங்களையும் முழு பலத்துடன் ஆராய்ந்து அறியவேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இக்காரியத்தை, இந்த வழியில் நாம் ஏன் செய்தோம், இப்படிப்பட்ட தொனியில் ஏன் பேசினோம் என்று நம்மைநாமே வினவவேண்டும். இப்படிப்பட்ட கவனம் மிக்க சுயபரிசோதனைகளும், நம் சிந்தனைகளை, வார்த்தைகளை, செய்கைகளை சீர்தூக்கிப்பார்ப்பதும், கர்த்தரோடு இசைவாக இருக்க விரும்பாத நபருக்கு மிகவும் வெறுப்பை உண்டுபண்ணும். ஆனால் கர்த்தரிடத்தில்

உடன்படிக்கை செய்து, அதனை உண்மையாய் நிறைவேற்ற தேடுபவர்களுக்கு, அப்படிப்பட்ட வழிமுறை மிகுந்த ஆசீர்வாதத்தையும், இருதயத்துக்கு தேற்றுதலை அந்நேரத்திலும், வருங்காலத்திலும் பலப்படுத்துவதையும் கொண்டு வருவதை உணர்வார்கள். கர்த்தருடைய பராமரிப்பின் வழிகளில் இவ்வாறு நிலைத்திருப்பவர்களை இது பொருத்தமானவர்களாக்கி, பரலோக இராஜ்யத்தின் ஸ்தலங்களுக்கு அவர்களை ஆயத்தமாக்குகிறது.

---

## விநோதமான ஜனங்கள்

## PECULIAR PEOPLE

ஒரு விநோதமான ஜனம் தம்

கொடிதனை அவிழ்த்தே பறக்கவிட்டே,
உலகமுழுமையும் கவர்ந்திழுக்கின்றாரே,
இவ்வாச்சரியமூட்டும் மனிதரை நாமும்
பேட்டி காண்போம் வருவீரே
அது உமக்கும் எமக்கும் ஒரு புத்துணர்வைத் தருமே
அவர்கள்பெயர்கூட விநோதமாய் உள்ளதே
பவுலுக்குப் பின்னாகப் பெயரிடப்படவில்லை,
லூதருமில்லை, கால்வினுமில்லை, வெஸ்லியுமில்லை,
மற்றெவருமில்லை, கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள்,
அவர் பெயரைத்தாங்கியே நிற்கின்றாரே,
சகோதரன் சகோதரி என்றே
பெயரிட்டே அழைத்துக் கொள்வாரே,
அவர்கள்பேச்சும்கூட விநோதம்தானே
அவர் பாடத்திலொன்று, விலைமதிப்புமிக்க இரட்சிப்பு,
யுகங்களைக்குறித்த தேவனின் திட்டம்,
உலக மாந்தர் அனைவர்க்கும் ஈடுபலி,
யூபிலி வருடத்தின் ஓய்வு,
மனித வீழ்ச்சியிலிருந்தே பாடம் கற்கின்றாரே,

அவர் உணவும்கூட விநோதமானதே,
தேவனின் நல்வார்த்தை தாமே அவர்க்குணவாமே,
சரியாகப் பகுத்தே அளிக்கப்படுதே, ஏற்ற கால போஜனம்
எளிமையாகவே வெளிப்படையாகவே கொடுக்கப்படுதே,

அவர் உடைகூட வித்தியாசம் காட்டலாகுதே,
அது அவர்க்கு சொந்தமில்லை,
பெருந்தன்மையாளர் இயேசுவிடம்
கடனாகப்பெற்றே அணிந்துகொண்டாரே,
வெண்மையாய், கறைதிரையின்றி கிறிஸ்துவின்
நீதியின் வஸ்திரம் பெற்றுக்கொண்டாரே

அவர் வேலைகூட ஆச்சரியம்தானே,
விளைந்த நிலத்தில் அறுவடைசெய்கிறார்
விளைபொருட்கள் எங்கோ,
அரிவாளை நீட்டி அறுக்கின்றார்,
கோதுமையை களஞ்சியத்தில் சேர்க்கின்றார்,
எதிரியோ தன் வலையினில் விழவைத்த
பதரை கட்டுக்களாகக் கட்டுகிறார், எரிப்பதற்கே

அவர் ஓய்வும்கூட புதுமையானதே,
தேவனின் ஓய்வுநாளில் நுழைந்துவிட்டாரே,
மரியாள் தெரிந்துகொண்ட நற் பாத்திரம் தன்னை
தாமும் தெரிந்துகொண்டாரே,
அவர் வெற்றிக்காய் இனியும்
கவலைகொள்ளத் தேவையில்லை
கிறிஸ்துவுடனே எதிர்காலத்தில் ஒவ்வொரு குடும்பமாய்
ஆசீர்வதிக்கும் வேலையைச் செய்வாரே,

அவர் இனம்கூட ஓர் தனித்தன்மை வாய்ந்ததே
மிகவும் குறுகிய பெயராகும்,
இவை அனைத்துமே ஒரு சிறுவார்த்தையிலே
புரிந்துகொள்ளலாகுமே,
அது மனிதனால் உண்டானதல்ல,
பரத்திலிருந்தே தரப்பட்டதே,
அந்தப் பெருமைக்குரிய வார்த்தையோ ''அன்பு''.

அவர் விசுவாசம்கூட வித்தியாசமானதே,
தேவனின் வார்த்தை உண்மையானதென்றே
மனதினில் விசுவாசம் கொள்கின்றார்,
மனிதனின் வார்த்தையோ ஏமாற்றும், வார்த்தைதவறா
தேவனின் வார்த்தைதன்னை விசுவாசிக்கிறார்.

அவர் நம்பிக்கையும் வித்தியாசமானதே,
அவர் இயேசுவுடனேகூட அரசாட்சிதனிலே பங்காளராகவே
பங்குபெறவே விழைகின்றார்.
தேர்ந்தெடுக்கப்பட்டு சபையோராய்
தேவனின் கிருபை இலவசமாகவே
முழு மனுக்குலத்திற்கும் அளிப்பதை அறிவார்,
அவரன்பும்கூட தனிச்சிறப்பு வாய்ந்ததே, அவர்
பிதாவாகிய தேவனை மேலாய் நேசிக்கின்றாரே,
அவரது சித்தமே இவரது சித்தமாம்,
இவர் வாழ்க்கையைப்பற்றிக் கவலையே இல்லை,
அதை மகிழ்வுடனே முழு மனதுடனே
ஒவ்வொரு தாலந்தையும் செலவுசெய்யக்கொடுக்கின்றார்,
தம்மை முழுதும் ஒப்படைக்கின்றார்.

அவர் மகிழ்ச்சியும்கூட தனிச்சிறப்புபெற்றதே,
ஆழ்ந்த மாறாத சந்தோஷம்,
எல்லைமீறி தொல்லைகொடுக்கும்செயல்கள்
அவர்க்கே நேரிட்டாலும்,
கிறிஸ்துவுக்காய், அவர் நாமத்துக்காய் பாடுபடுவதிலே,
அவரடைந்த இழிவை இவர் அடைய, தாங்க விழைகிறார்,

அவர் வீடும்கூட விநோதமானதாம், பரலோகவீடு,
பரலோக வாசிகளாய் மாறிவருகிறார்,
பூமிக்குரிய ஆசீர்வாதம் யாவும் கைவிட்டே,
வீடு நிலம் சொத்து சுகம், விட்டுவிட்டே,
கர்த்தரோடே கைகோர்த்து அவர் மாளிகையில்
ஆடம்பரமாய் வாழ்ந்திடவே ஆசிக்கிறார்,
விநோதமான ஜனங்கள் இவர்கள்

---